# அமைதிப் படையினரின் காவலில் இருந்த நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்களை காணவில்லை!

விலை ரூபா 3-00

ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 32 மாசி: 15 ஷஃபான் பிறை: 1 இதழ்: 14

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 27-02-1990

...-2-27 ...icals Division Library

## வல்வை பிரஜைகள் குழு தேடுகிறது

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறையில் இந்திய அமைதிப் படையினரின் 'புனர்வாழ்வு தடுப்பு முகாமில தடுத்து வைககப்பட்டவர்களில் நூற்றுக்கும் மேற்பட்டவர்களை காணவில்லை என்று வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுத் தலைவர் திரு. எஸ். செல்வேநதிரா தெரிவித்துள்ளார்.

அண்மையில் திரு. செல்வேந்திராவைச் சந்தித்த பத்திரிகையாளர் ஒருவருக்கு மேற்படித்தகவல்களை அவர் தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது:

''காணமல் போன இநத இளைஞர்களை நாம் இப்போது தேடிவருகிறோம். இவர்களின் நிலைபற்றி இதற்குப் பொறுப்

(8-ம் பககம் பார்க்க)

உ. அ. அதிபர் பணிமனைகள்

## கோட்ட செயலாளர் பணிமனையாக பெயர் மாற்றம்

[யாழ்ப்பாணம்]

அரசாங்க அதிபர்கள் மாவட்ட ஆணையாளராகவும், உதவி அரசாங்க அதிபர்கள் கோட்டச் செயலாளராகவும் பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதனால் சகல உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளும் கோட்டச் செயலாளர் பணிமனை என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இப்பெயர்ப்பலகைகளை விரைவில் சகல அலுவலகங்களிலும் பொருத்துவதற்கு மாவட்ட ஆணையாளர் பணிமனை நடவடிக்கை எடுத்துள்ளது. [11]

கலைஞர் - தமிழ் குழுக்கள்

# சமரசப் பேச்சுவார்த்தையில் தடங்கல் ஏற்பட்டுள்ளது!

பத்மநாபா, வரதர் கூட்டாக எழுதிய

## கடிதம் கலைஞரிடம் கையளிப்பு

(சென்னை)

**இலங்கை வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தமிழ்க் குழுக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காகத் தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி மேற்கொண்ட முயற்சிகளுக்குத் தடங்கல் ஏற்பட்டுள்ளது-**

நேற்று சென்னையில் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் தொழில் அமைச்சர் ஜனுப் அபு யூசுப் மற்றும் சபைத் தலைவர் திரு. பொ. ராஜகாரியர், அங்கத்தவர்களான திரு வி. ஏ. கந்தசாமி, திரு சாந்தன், திரு. ஸ்ரீதரன் ஆகியோர் கொண்ட குழுவுடன் பேச்சு நடத்திய முதலமைச்சர் திரு. கருணாநிதி, பின்னர் பத்திரிகையாளர்களிடம் மேற்படி தகவலை வருத்தத்துடன் தெரிவித்தார்.

பல வாரங்களாகப் பல்வேறு தமிழ் அமைப்புக்களுடன் பல தடவை தாம் நடத்திய பேச்சு வார்த்தைகளில் ஒருசில விபரங்களை அவர் எடுத்துரைத்தார்

வடக்கு-கிழக்கு மாகாண சபையை அதன் முதலமைச்சர் திரு வரதராஜப்பெருமாளே தாமாக முன்வந்து கலைக்க வேண்டுமென்றும், அதற்குப் பின்னர் நான்கைந்து மாதங்

(8ம் பக்கம் பார்க்க)

## நகைக்கடை தராசுகள் பாவனையிலிருந்து தவிர்க்குமாறு கோரிக்கை!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள நகைக் கடைகளில் பாவனையில் உள்ள சகல தராசுகளையும் பாவனையில் இருந்து தவிர்க்குமாறு யாழ். மாவட்ட நிறுத்தல், அளத்தல் திணைக்களம் கோரியுள்ளது.

இத்தராசுகளைப் பாவிப்பது 1988ம் ஆண்டு நவம்பர் மாதம் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவுறுத்தல் 496/22க்கு அமையக் குற்றமாகக் கணிக்கப்படும். இக்குற்றத்திற்கு 1,000 ரூபாவுக்குக் குறையாத அபராதமோ அல்லது 6 மாதச் சிறையோ தண்டனையாக வழங்கப்படும்.

இத்தகவல்களை யாழ்ப்பாணம்-கிளிநொச்சி நிறுத்தல் அளத்தல் திணைக்களப் பொறுப்பதிகாரி திரு. கா.

(8ம் பக்கம் பார்க்க)

## 'எமதுகட்சி ஒரு மக்கள் இயக்கமாக விரிவாக்கப்படவேண்டும்' - மாத்தயா

[மட்டக்களப்பு]

''எமது கட்சி ஒரு மக்கள் இயக்கமாக விரிவாக்கம் செய்யப்படவேண்டும். எமது கட்சி வாயிலாக தமிழ், முஸ்லிம் மக்கள் அரசியல் நீரோட்டத்தில் நேரடியாகப் பங்குகொண்டு எமது போராட்டத்தைமுனைப்புடன் முன்னெடுக்க நாம் அவர்களுக்கு வாய்ப்பளிக்கின்றோம். உண்மையான ஒரு ஜனநாயக மக்கள் ஆட்சியை மலரச்செய்து எமது இலட்சியத்தை வென்றெடுக்க எமது கட்சி உறுப்பினர்கள் அயராது பாடுபடவேண்டும்.''

நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வாகரையில் நடைபெற்ற பொதுச்சபை மகாநாட்டிற்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு கோபாலசாமி மகேந்திரராஜா [மாத்தயா] தலைமை வகித்துப பேசியபோது இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் பேசியபோது கூறியதாவது;-

எமது விடுதலை இயக்கம் பதினேழு ஆண்டுகால வரலாற்று பரிமாணத்தைக் கொண்டு வளர்ந்திருக்கின்றது. நீண்டகாலமாவே எமது புரட்சிகர ஆயுதப்போராட்

(8ம் பக்கம் பார்க்க)

## இறைவரிக்கிளை இயங்குகிறது

[மானிப்பாய்]

யாழ். செயலக இறைவரிக்கிளை கடந்த மூன்று வருடங்களின் பின்னர் நேற்று முதல் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

கடந்த 87ம் ஆண்டு மூடப்பட்ட மேற்படி அலுவலகத்தில் நேற்று சுமார் 50 பேர் இவ்வாண்டுக்கான வாகன வரியைச் செலுத்தி தமது அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொண்டனர்.

இவ்வலுவலகத்தில் மோட்டார் வாகனங்களுக்குரிய வரி, மதுவரித் தீர்வை, வியாபாரப் பதிவு, நகை அடைவுபிடிக்கும் நிலையத்திற்கான வரி முதலியன ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

சீதனப் பிரச்னையில் எழுந்த வாய்ச்சண்டையில்

## மாமனுர் பொல்லால் தாக்கியதில் மருமகன் மரணமானுர்!

[யாழ்ப்பாணம்]

மாமனுருக்கும் மருமகனுக்குமிடையில் சீதனப் பிரச்னையில் உருவான வாய்ச்சண்டையின் முடிவில் மாமனுர் மருமகனை தலையில் பொல்லால் அடித்தார். நினைவிழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மருமகன் தீவிர சிகிச்சைக்குட்படுத்திய சமயம் அங்கு மரணமானுர்.

ஆனைக்கோட்டை கூழாவடியைச் சேர்ந்த துரைசிங்கம் ஜோசப்ராசா [வயது 35] என்பவரே மரணமானவராவார்.

இச்சம்பவம் பற்றித் தெரிய

(8ம் பக்கம் பார்க்க)

போதைவஸ்து கடத்தல்

## யாழ். வாசிக்கு மரண தண்டனை!

(கொழும்பு)

போதை வஸ்துக் கடத்தலில் ஈடுபட்ட யாழ். வாசிக்கு நீர்கொழும்பு உயர் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

1987ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி இந்தியாவிலிருந்து 112 கிராம் போதைவஸ்தைக் கடத்தி வந்ததாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சதாசிவம் சிவானந்தமூர்த்தி என்பவர் கட்டுநாயக்காவில் சுங்க அதிகாரிகளினுல் கைது செய்யப்பட்டார்.

இவருக்கு எதிரான வழக்கு நீர்கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நடந்தபோது, பெருமளவு சுங்க அதிகாரிகள் உட்பட 14 பேர் சாட்சியமளித்தனர். இதையடுத்து இவருக்கு மரண தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டது. (சி)

## பட்டதாரிகள் நியமனம்

[மன்னு ]

மன்னுர் மாவட்டத்தில் வேலையற்றிருக்கும் பட்டதாரி இளைஞர்களுக்கு எதிர்வரும் மார்ச் மாதம் முதல் ஆசிரியர் நியமனம்வழங்கப்படவுள்ளது.

வேலையற்றிருக்கும் பட்டதாரிகளின் விபரப்பட்டியலை கல்விப் பணிப்பாளர் தொகுத்து திருகோணமலை [illegible] [illegible] செய்யப்படுமெனவும் அறியப்படுகின்றது.

இலங்கையில் மனித உரிமை மீறல்

## சர்வதேச ரீதியில் எதிர்ப்பு இயக்கம் எதிர்க்கட்சிகள் நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பாக உலகளாவிய ரீதியில் எதிர்ப்பு இயக்கம் ஒன்றை நடாத்த எதிர்க்கட்சிகள் முடிவுசெய்துள்ளன.

இதற்கமைய அமெரிக்க மனித உரிமைகள் கழகத்திற்கு

(8-ம் பக்கம் பார்கக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரி விளம்பரம்

## விற்பனைக்கு

உடுவிலில் நல்ல சுற்றுடலில்( பாடசாலை, கோவிலுக்கு அருகில்) நன்னீர்க் கிணற்றுடன், வீடு கட்டுவதற்குகந்த பனைகளுடன் இரண்டு பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு! S சந்தானகுமார், அம்பலவாணர் வீதி, கற்பொக்கணை. உடுவில். (சி-3533)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

Prima Lohmann சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், புறேயிலர் குஞ்சுகள் கறுப்பு, சிவப்பு சேவற்குஞ்சுகள் Golden Comet, HylineBlack, பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன்கிழமைகளில் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்டர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி 3505)

## தேவை

கல் உடைக்கும் தொழிற்சாலைக்கு வாச்சர் (காவலாளி) உடன் தேவை. நற்சாட்சி பத்திரத்துடன் நேரில் வரவும். தொடர்பு; சிவபாதம் கிறசர், சாவகச்சேரி வீதி, புத்தூர். (சி-3534)

கல் உடைக்கும் தொழிற்சாலைக்கு தொழிற்சாலையை நடாத்தக்கூடிய அனுபவமுள்ள மனேஜர் தேவை. தங்கும் இடவசதியுண்டு. நற்சாட்சிப்பத்திரத்துடன் நேரில் வரவும். சிவபாதம் கிறசர், சாவகச்சேரி வீதி, புத்தூர். (சி-3535)

# நாடு திரும்பும் அகதிகளுக்கு வீடமைக்க பொருளுதவி

## ஐ. நா. உயர் ஸ்தானிகராலயம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய நூறுபேருக்கு இம்மாதம் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் சொந்தமாக வீடுகளை அமைப்பதற்கான கட்டிடப் பொருட்களை விநியோகித்துள்ளது.

இவ்வீடுகளை நிர்மாணிப்பதற்கு கரவெட்டியில் இருபத்திமூன்று பேருக்கும், வேலணையில் ஏழு பேருக்கும், கோப்பாயில் பதினுலு பேருக்கும், சாவகச்சேரியில் ஒன்பது பேருக்கும், நல்லூரில் மூன்று பேருக்கும், தெல்லிப்பழையில் ஆறு பேருக்கும், மருதங்கேணியில் ஒருவருக்கும், பருத்தித்துறையில் இருபத்திநாலு பேருக்கும், சங்கானையில் ஒருவருக்கும், சண்டிலிப்பாயில் பத்துப்பேருக்கும் வழங்கப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை முகாமையாளர் திரு. ஜோசப் மரியான் தெரிவித்துள்ளார்.

இவ்வீடுகள் ஒவ்வொன்றும் பதினையாயிரம் ரூபா செலவில் வழங்கப்படும் மூலப்பொருள்களைக் கொண்டு கட்டப்படவுள்ளன. இம்மாதிரியானவீடுகள் ஏற்கனவே ஐநூற்றி இருபத்திநாலு கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. மூலப்பொருட்கள் மூன்று கட்டமாக வழங்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (12)

## பல்கலைக்கழகத்தில் இன்று விரிவுரை

(யாழ்ப்பாணம்]

ஸ்கொத்லாந்து ஹேரியற்-உவாற் பல்கலைக்கழகத்தைத் சேர்ந்த பேராசிரியர் றேபேட் ஸ்ற்றேஜன் இன்று பி. ப 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் விரிவுரையொன்றை நிகழ்த்தவுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமும், ஸ்கொத்லாந்துப் பல்கலைக் கழகமும் இணைந்து மேற்கொள்ளவிருக்கும் செயல்திட்டம் பற்றியதாக இவ்விரிவுரை அமையும். (க)

## இடமாற்றத்தை நிறுத்தக் கோரிக்கை

(ஒட்டுசுட்டான்)

முத்தையன் கட்டு திட்ட நீர்பாசன பொறியியலாளர் திரு. என். சோதிராஜாவின் இடமாற்றத்தை நிறுத்திவைக்குமாறு கோரி, இப்பகுதியில் உள்ள பொது ஸ்தாபனங்கள் வட-கிழக்கு மாகாண அரசுக்கு மகஜர் அனுப்பியுள்ளனர்.

புனருத்தாரண வேலைகள் ஆரம்பமாகும் இவ்வேளையில் பொறியியலாளரை இடமாற்றம் செய்யவேண்டாம் என்று அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (144)

### வடமாகாண கடற்றொழிலாளர் சமாஜ ஊழியர்

# சம்பள உயர்வு கோரி அடையாள வேலை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாஜத்தைச் சேர்ந்த அறுபது ஊழியர்கள் நேற்று ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் ஒன்றை மேற்கொண்டனர்.

சமாஜத்தால் எழுத்துமூலம் உறுதியளிக்கப்பட்ட நானூறு ரூபா சம்பள உயர்வு வழங்கப்படாமை, எட்டு மாதங்களாக சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்ட ஊழியர் சேபலாபநிதி செலுத்தப்படாமை, சம்பள நிலுவை வழங்கப்படாமை, போனஸ் வழங்கப்படாமை ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இப்போராட்டம் நடைபெற்றது

ஊழியர்கள் மிக அமைதியாக வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாஜத்திற்கு முன்பாக அமர்ந்திருந்து பாதகைகள் மூலம் கோரிக்கைகளை எழுதிவைத்திருந்தனர்.

இவ்வேலை நிறுத்தம், ஓர் அடையாள வேலை நிறுத்தமாகவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதெனவும் அடுத்த நடவடிக்கைபற்றி முடிவு எடுக்கப் படுமெனவும் தொழிலாளர்சங்கத் தலைவர் திரு. டானியல் அன்ரனி தெரிவித்தார்.

வேலை நிறுத்தத்தில் மீன் ஆலை உற்பத்தி ஊழியர்கள், ஐஸ்தொழிற்சாலை ஊழியர்கள், சமாஜ தலைமையக ஊழியர்களும் கலந்துகொண்டனர். வேலைநிறுத்தத்தால் இத் தொழிற்சாலைகளும் தலைமையக பணிகளும் இயங்கவில்லையென்பது குறிப்பிடத் தக்கது. [12]

## தும்புதொழிற்சாலை மீண்டும் இயங்கும்

(மன்னார்)

தலைமன்னாரில் இயங்கிவந்த தும்புத் தொழிற்சாலைமீண்டும் இயங்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன

நாட்டில் ஏற்பட்ட பிரச்னை சாரணமாகஇத்தொழிற்சாலை இயங்கமுடியாத நிலையில் இருந்தது. தற்சமயம் யாழ்ப்பாண பனைவள அபிவிருத்திச் சபை இத்தொழிற்சாலையை பாரம் எடுத்து மீண்டும் ஆரம்பிக்க உள்ளது.

இதன் மூலம் பலர் வேலை வாய்ப்பைப் பெறுபவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

# வாகன அனுமதி உத்தரவுப் பத்திரம் யாழ். செயலகத்தில் வழங்கப்படுகிறது!

## மார்ச் 30-வரை மேலதிகக் கட்டணமில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண செயலகத்தில் வாகனங்களுக்கு இவ்வாண்டு அனுமதி உத்தரவுப்பத்திரம் நேற்றுமுதல் வழங்கப்பட்டு வருகிறது இந்த உத்தரவுப் பத்திரங்களை மார்ச் மாதம் 30-ம் திகதிவரை எதுவித மேலதிகக் கட்டணமுமின்றி வாகனச் சொந்தக்காரர்கள் பெற்றுக்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

வாகனச் சொந்தக்காரர்கள், தமக்குரிய வாகனத்தின் பதிவுப்புத்தம், நடப்பு ஆண்டுக்கான காப்புறுதிப்பத்திரம் ஆகியவற்றை செயலக இறைவரித்திணைக்களக் கிளையில் சமர்ப்பித்து அதற்கான விண்ணப்பப்படிவத்தைப் பெற்று வங்கியில் பணம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டையும் இணைத்துக் கொடுப்பதன் மூலம் வாகன அனுமதி உத்தரவுப்பத்திரத்தைப் பெற முடியும். இதற்கமைய நேற்று மட்டும் இருபத்தைந்து பேர் அந்த அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டனர். எந்த வாகனங்களுக்கும், கடந்த காலங்களில் வாகன அனுமதிப்பத்திரம் பெருமல் இருந்தாலும்கூட, அவை கணிக்கப்படாது இவ்வாண்டுக்கான கட்டணம் மட்டுமே செலுத்தி வாகன அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கு திணைக்களம் ஒழுங்குசெய்துள்ளது.

யாழ் மாவட்டம் தவிர்ந்த சகல மாவட்டங்களிலும் வாகனப் பதிவுசெய்தவர்கள் வாகன அனுமதிப்பத்திரம் பெற விரும்பினுல், பழைய ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்கவேண்டும்.

மோட்டார் சைக்கிள்களுக்கு இருநூறு ரூபா வாகன அனுமதிப்பத்திர கட்டணமாகும். மற்ற வாகனங்களுக்கான சட்டணம் ஐநூறு ரூபாவாகும்.

மோட்டார் சைக்கிள் தவிர்ந்த சகல வாகனங்களுக்கும் வாகன அனுமதிப்பதிரம் பெற விண்ணப்பிக்கும்போது வாகனத் தகுதிச்சான்றிதழ் சமர்ப்பிக்கவேண்டுமென அவ்வதிகாரி தெரிவித்தார்

வர்த்தக ஸ்தாபனங்களைப் பதிவுசெய்வதற்கான பணிகளையும் திணைக்களம் ஆரம்பித்துள்ளது இத்திணைககளப் பணிகள் 87-ம் ஆண்டு ஜூலை மாதத்திற்குப் பின்னர் இப்போதுதான் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (12)

## மன்னார் நவீன சந்தை

(மன்னார்)

மன்னார் பஸ் நிலையத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சந்தைக்கட்டிடங்கள் அண்மையில் திறக்கப்பட்டன.

## றொக்கப்பணமாக சம்பளம்

[மன்னார்]

மன்னார் மாவட்டத்தில் அரச ஊழியர்களுக்குச் சம்பளம் றொக்கப்பணமாக வழங்கப்படுகின்றது.

பாதுகாப்பு காரணமாக முன்னர் காசோலையாகவே சம்பளம் வழங்கப்பட்டது. இதனுல் அரச ஊழியர்கள் காசோலைகளை மாற்றுவதற்கு பெரிதும் சிரமத்தை மேற்கொள்ளவேண்டி இருந்தது தற்சமயம் இந் நிலை மாறி றொக்கப்பணமாக சம்பளம் வழங்கப்படுகின்றது.

### முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில்

# ஆசிரியர் பற்றுக்குறை மாணவர் கல்வி பாதிப்பு

(மாங்குளம்)

முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் காணட்படும் ஆசிரியர்கள் பற்றுக்குறைவால் மாணவர்களது கல்வி நிலை பாதிக்கப்படுமென்று அஞ்சப்படுகிறது.

மகாவித்தியாலயத்தில் சுமார் ஆயிரம் மாணவர்களுக்கு இருபது ஆசிரியர்களே கல்வி கற்பிக்கின்றனர். இக் கல்லூரியில் கணிதம், விஞ்ஞானப்பட்டதாரிகள் இல்லாததினுல் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி[illegible] முடியாதிருப்பதாகவும் இக் கல்லூரிக்கு 15 ஆசிரியர்கள் தேவையெனவும் முல்லைமணி திரு. வே. சுப்பிரமணியம் அங்கு நடந்த பாடசாலை அபிவிருத்திச்சபைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

ஆசிரியர் பற்றுக்குறையை நிவர்த்தி செய்ய வசதிக்கட்டணத்தில் பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதென அக்கூட்டத்தில் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இவ்விடயத்தில் உயர் அதிகாரிகள் மாணவர்கள் நலன் கருதி [illegible] வேண்டுமெனவும் முல்லைத்தீவு பாடசாலை அபிவிருத்திச் சபை அங்கத்தினர் திரு. அ. சிவனேஸ்வரன் நிருபருக்குத் தெரிவித்தார்.

இதேவேளை அக்கல்லூரில் தளபாடப் பற்றுக்குறை இருந்து வருவதனுல் அக்கல்லூரி மாணவர்களிடத்தில் கட்டணம் அறவிட்டு தளபாடங்கள் செய்யப்படுவதாகவும் மாணவர்களுக்கேற்ப போதிய வகுப்பறைகளில்லாததினுல் மாணவர்கள் மேலும் அவலமுறுவதாகவும் சொல்லப்படுகிறது. [150]

## பயிலுநர் ஆசிரியர் தெரிவு முறைப்பாடுகளை அடுத்து புதிதாக 27 பேர் தெரிவு?

(மன்னார்)

மன்னாரில் மேலும் 27 பேர் ஆசிரியர் பயிலுநர்களாகத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

மேற்படி தெரிவு நேர்முகப் பரீட்சையில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டதையடுத்தே மேற்படி 27 பேரும் புதிதாகத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது:

ஆசிரியர் பயிலுநர் நேர்முகப்பரீட்சையில் தெரிவுசெய்யப்படாதவர்களின் மேன்முறையீட்டு மனுக்கள் கடந்தவாரம் பரிசீலனை செய்யப்பட்டது, முறையீடு அனுப்பிய அனைவரையும் அழைத்து மேலும் ஓர் நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டது.

இதில் ஏற்கனவே நடைபெற்ற நேர்முகப்பரீட்சையில் வழங்கப்படாத புள்ளிகள் இதில் வழங்கப்பட்டும் அவர்களின் குறைகளும் நன்கு தெளிவாகக் கேட்கப்பட்டு அவர்களைத் திருப்தியடைய ஏற்பாடு செய்யப்பட்டது.

இதற்கமைய இன்னும் 27 ஆசிரியர் பயிலுநர்கள் மன்னாரில் தெரிவுசெய்யப்படுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சிங், ராஜீவின் எதிர்காலத்தை நிர்ணயிக்க இந்தியாவில் எட்டு மாநிலங்களில்

# இன்று மினி பொதுத் தேர்தல்

## 21 கோடிப் பேர் வாக்காளர்கள்

(புதுடில்லி)

**இந்தியாவின் எட்டு வட மாநில சட்ட சபைக்கும், தென்பகுதியில் ஒரு யூனியன் பிரதேசத்துக்குமான தேர்தல் இன்று நடை பெறுகிறது. இத்தேர்தல் பிரதமர் திரு. வி. பி. சிங்கினதும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராஜீவ் காந்தியினதும் எதிர் காலத்தை நிர்ணயிப்பதாக அமையுமென அரசியல் அவதானி கள் தெரிவித்துள்ளனர்.**

இத்தேர்தல் வடமாநிலத்தில் ஹிமாசல் பிரதேஷ், பீகார், அருணசல பிரதேஷ், ஒரிசா, மகாராஷ்ரா, ராஜஸ்தான், குஜராத், மேகாலாயா சட்டசபைகளுக்கும் தென்பகுதியில் பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்திற்கும் நடைபெறுகிறது,

இத்தேர்தலில் சுமார் 21 கோடி வாக்காளர்கள் வாக்களிப்பர். இதற்கான சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேர்தல் சுதந்திரமான முறையில் நடைபெறுவதை பார்வையிட 350 பேர் அவதானிகளாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். தேர்தலில் இடம்பெறும் முறைகேடுகள் குறித்தும் இவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்கள்.

மேற்படி எட்டு சட்ட சபையும், ஒரு யூனியன் பிரதேசமும் தற்போது இந்திரா காங்கிரஸின் ஆளுகையிலிருந்துவருகிறது. அண்மையில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் வடமாநிலங்களில் இந்திரா காங்கிரஸ் படுதோல்வி அடைந்ததும் எதிர்க்கட்சிக் கூட்டணி அமோக வெற்றி பெற்றதும் தெரிந்ததே.

இந்தத் தேர்தல்களின் முடிவைப் பொறுத்தே பிரதமர் திரு. வி. பி. சிங்கினதும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராஜீவ் காந்தியின் எதிர் காலம் அமையுமென அவதானிகள் தெரிவித்துள்ளனர். (சி)

## பனிப்புயலில் சிக்கியவர்கள் மீட்பு!

(புதுடில்லி)

இமயமலை யடிவாரத்தில் சிக்கிய 145 பேரை இந்திய விமானி ஒருவர் காப்பாற்றி ஒரு உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

பனிப்புயலின் மத்தியில் மிகுந்த சிரமங்களை சமாளித்து ஹெலிகப்டர் மூலம் இவர் இவ்வளவு தொகையான பேரைக் காப்பாற்றிய காரணமாக இவரது பெயர் உலக 'கின்னஸ்' புத்தகத்தில் இடம் பெறவுள்ளது.

### அங்கோலாவில்

## 'யுனிற்ரா' நிலைகள் மீது விமானப்படை தாக்குதல்

(லுவாண்டா)

அங்கோலாவின் தென்பகுதியில் 'யுனிற்ரா' கெரில்லாக்களின் கட்டுப்பாட்டிலிருக்கும் விமானத்தளம் ஒன்றின்மீது விமானப்படை பலத்த தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.

இத்தாக்குதலில் பல கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டதாகவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதலை மூன்று விமானங்கள் வெற்றிகரமாகமேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் தாம் இத்தாக்குதலை முறியடித்துள்ளதாகவும் இரு தரப்பிடையேயும் சமாதானப் பேச்சுக்கள் நடைபெறும் வேளையில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்றும் இதனல் அரசு பாரிய விளைவுகளை எதிர்நோக்க வேண்டிருக்குமென்றும் கெரில்லாக்கள் தெரிவித்துள்ளனர். [சி]

### மனிதஉரிமை மீறல்

## அமெரிக்க குற்றச்சாட்டிற்கு பாகிஸ்தான் கண்டனம்

(கராச்சி)

பாகிஸ்தான் தொடர்ந்தும் மனித உரிமைகளை மீறி வருவதாக அமெரிக்க மனித உரிமைகள் குழு தெரிவித்த குற்றச் சாட்டிற்கு பாகிஸ்தான் வன்மையாகக் கண்டனம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் முன்னாள் அதிபர் ஷியாவுல்-ஹக் இருந்த போது நடந்த மனித உரிமை மீறல்கள் தற்போது திருமதி பெனசிரின் ஆட்சியிலும் இருந்து வருவதாக அக்கழகம் குற்றம் சாட்டியிருந்தது.

அமெரிக்காவின் இக் குற்றச்சாட்டை வன்மையாக மறுதலித்த பாகிஸ்தான் இது தமக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பிரசார நடவடிக்கை என்றும் பாகிஸ்தானில் மனித உரிமைகள் மதிக்கப்படுவதாகவும் கூறியுள்ளது. (சி)

## "மக்களின் முழு ஆதரவே புலிகளின் வெற்றிக்கு காரணம்"

காரைநகரில் நெடுமாறன்

(யாழ்ப்பாணம்)

உலக வரலாற்றில் மக்களை இணைக்காத போராட்டங்கள் வெற்றிபெற்றதாக வரலாறு இல்லை. விடுதலைப் புலிகளின் போராட்டத்தில் மக்களே அவர்களுக்குப் பெரும் அரண்களாக இருந்தார்கள் இது அவர்களின் தியாகத்திற்கு ஒரு சான்று.

இவ்வாறு தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. ப. நெடுமாறன் காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் பேசுகையில்:

1987 ல் இலங்கை – இந்திய ஒப்பந்தம் வந்தபோது அதனை நாம் எதிர்த்தோம். இதன் மூலம் தமிழர்கள் பெரும் துன்பங்களையும் இக்கட்டானகால கட்டங்களையும் சந்திப்பார்களெனக் கூறி தமிழ்நாட்டில் ஊர்வலம் நடத்தினேம். ஒப்பந்த நகலைக்கூட எரித்தோம். இதனல் ஆயிரக்கணக்கான எமது தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர். இந்தப் போராட்டங்களில் திராவிடர் கழகமும் முன்னணியில் நின்று செயல்பட்டது.

இந்திய ராணுவத்திற்கும், புலிகளுக்குமிடையில் யுத்தம் ஆரம்பமானபோது புலிகள் எத்தனை மணித்தியாலங்கள் நின்று தாக்குப்பிடிப்பார்கள் எனக் கவலைப்பட்டவர்கள் அதிகம், இது சாத்தியமாகுமா என நினைத்தோம் இவ்வாறு வெற்றி கிடைக்குமென அப்போது யாரும் நினைக்கவில்லை.

பங்களாதேஷில் அமெரிக்காவின் சகல உதவிகளுடனும் இருந்த பல லட்சக்கணக்கான பாகிஸ்தான் ராணுவத்திற்கு எதிராக இந்தியப்படை போர் தொடுத்து 14 நாட்களில் வெற்றிபெற்றது. அதேநிலையில்தான் இங்கு ஒருநாளிலோ அல்லது இரண்டு நாட்களிலோ வெற்றி பெறலாமென இந்திய அரசு தெரிவித்திருந்தது.

முதலில் 25,000 ராணுவமும், பின் 50,000 ராணுவமும் இறுதியில் ஒரு லட்சத்திற்கு மேலும் இலங்கைத் தீவில் சின்னஞ்சிறிய வடக்குக் கிழக்கில் பெரும் யுத்தத்தினை நடாத்தியது. இந்தியப் படை இன்று நாடு திரும்புகிறது. இரண்டு ஆண்டுகளாக நடைபெற்ற போரில் திரு. ராஜீவ் காந்தி சாதித்தது என்ன!

யுத்தம் தொடங்கியபோது பிரபாகரன் தலைமையிலான இயக்கத்தில் 2000 பேரே இருக்கிருர்கள். அதுவும் ஆயுதபாணிகள் ஆயிரம்பேரே என இந்தியப்படைகள் போரிட்டன. ஆனல் புலிகளோ மக்கள் ஆதரவுடன் எதிர்த்தாக்குதல் நடாத்தினர். மக்களுடன் இணைந்து போராடினுர்கள். அதனல் படை நாடு திரும்ப வேண்டியநிலை ஏற்பட்டது.

புலிகளுக்கு உதவிய ஆயிரக்கணக்கானேர் இங்கு காணுமல் போய்விட்டனர். இருந்தும் மக்கள் தொடர்ந்தும் தமது இழப்புக்களைப்பொருட்படுத்தாமல் உதவி வருகிருர்கள். உலகின் மிகச் சிறந்த போராட்டத் தளபதிகளில் குறிப்பிடத்தக்கவர் பிரபாகரன் குறைந்தளவு இளைஞர்களுடன் உலகின் நாலாவது வல்லரசைக் கலங்கவைத்து விட்டார்.

கடந்த வருடம் லண்டனில் இடம்பெற்ற உலகத் தமிழர்கள் மாநாட்டிற்குச் சென்றிருந்தேன். அங்கு பலஸ்தீனிய விடுதலை இயக்கப் பிரதிநிதிஒருவரும் வந்திருந்தார். அப்போது அவர் கூறினர்; உலக நாடுகளின் முழு ஆதரவையும் பெற்றுப்பெருமளவு படைபலத்துடன் போராடிவரும் எம்மால் இன்னும்ஒரு அடிநிலத்தைக்கூட மீட்கமுடியவில்லை. ஆனல் இந்தியா இலங்கையில் என்ன பாடுபடுகிறது இது எப்படிச் சாத்தியமாகும் என்ருர்.

இதுதான் தமிழன் வரலாற்றில் புகழ்பூத்த காலகட்டமாகும். தமிழன் என்ருல் அடிவாங்கப் பிறந்தவன் என்ெருரு காலம் இருந்தது. அது முற்றிலும் மாறிவிட்டது. இந்த மண்ணிலிருந்தே இந்த மண்ணிற்காகப் போராடும் இளைஞர்களை மக்கள் மதிக்க வேண்டும். உங்களது நேர்மையான போராட்டம் விரைவில் வெற்றிபெற்று நீங்கள் சுதந்திரமாக உலாவும் காலம் வெகுதூரத்தில் இல்லை. இந்தப் போராட்டத்திற்கு உலகத் தமிழர்களின் முழு ஆதரவும் உண்டு என்று கூறினர். (சி)

## ஆஸ்திரேலிய அணி இன்ணத்தை சுவீகரித்தது

(சிட்னி)

ஆஸ்திரேலியாவில் 3 நாடுகள் பங்குபற்றிய வென்சன்-ஹெட்ஜஸ் வெற்றிக்கிண்ணத்தை ஆஸ்திரேலிய அணி சுவீகரித்துக்கொண்டது. இவ்வணிக்கு முதல் பரிசாக 32,000 டாலர் வழங்கப்பட்டது.

இந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகள் பங்குபற்றின. ஒவ்வொரு அணியும் தலா எட்டு ஆட்டங்களில் கலந்துகொண்டன. இறுதிப் போட்டிக்கு ஆஸ்திரேலிய-பாகிஸ்தான் அணிகள் தெரிவுசெய்யப்பட்டன.

மூன்று போட்டிகளைக் கொண்ட இறுதிப் போட்டியில் முதல் இரண்டிலும் ஆஸ்திரேலிய அணி மிக இலகுவாக பாகிஸ்தானை தோற்கடித்து இந்த வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. இரண்டாம் இடத்தைப் பெற்ற பாகிஸ்தான் அணிக்கு 16 000 டாலர் பரிசுத் தொகையாக வழங்கப்பட்டது (சி)

## "போராட்டத்தைஇடைநிறுத்தி ஆயுதங்களை கைவிடுக"

### பிஷப் டுட்டு வேண்டுகோள்

அதிபர் கிளார்க்கிற்குடு பாராட்டு

(ஜொகனஸ்பேர்க்)

தென் ஆபிரிக்க அரசுக்கு எதிராக போராடிவரும் கறுப்பினத்தவர்கள் ஆயுதப் போராட்டத்தை இடை நிறுத்தி ஆயுதங்களை கைவிடுமாறு ஆட்பிஷப் டுட்டு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர்கள் கலந்துகொண்ட கூட்டமொன்றில் உரையாற்று கையிலேயே பிஷப் டுட்டு மேற்படி வேண்டுகோளை விடுத்தார். அங்கு அவர் மேலும் பேசுகையில்;

அரசு அதிபர் திரு. கிளார்க் தற்போது மேற்கொண்டு வரும் பல முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எதிர் காலத்தில் தென் ஆபிரிக்காவில் அமைதியும் சமாதானமும் நிலவ வழிவகுக்கும். இதன் முதற்கட்டமாக அவர் கறுப்பினத்தவர்களுக்கு எதிராக இருந்த பல தடைச் சட்டங்களை நீக்கியுள்ளார்.

மேலும் கறுப்பினத்தவர்களைப் பாதிக்கும் சட்டங்களை அகற்றவும் வெள்ளையர்களும் கறுப்பினத்தவர்களும் ஒற்றுமையுடன் வாழ பொதுச்சட்டங்களைத் தாம் அமுலாக்கவுள்ளதாகவும் அதிபர் திரு. டபிள்யு. டி. கிளாக் தெரிவித்துள்ளதாகவும் பிஷப் டுட்டு கூறினர்.

சுமார் பத்தாயிரம் மக்கள் கலந்துகொண்ட இப்பொதுக் கூட்டத்தில் ஆயுதப் போராட்டத்தை இடைநிறுத்த வேண்டுமென பல ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர்கள் வலியுறுத்தியதும் குறிப்பிடத்தக்கது. (சி)

### வடக்கு-கிழக்கில்

## 75 கூட்டுறவுப் பரிசோதகர் மார்ச் 1-ல் நியமனம்

(திருமலை)

வடக்கு, கிழக்கு மாகாண உணவு, வர்த்தக அமைச்சின் கீழ் இயங்கிவரும் 75 கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கான நியமனங்கள் மார்ச் மாதம் 1-ம் திகதி முதல் வழங்கப்படும்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு அனுப்பி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

மனதில் பகைமையை அடக்கிவைத்திருத்தல் நேரடிப் போரைவிடக் கொடியது.

— மகாத்மா காந்தி

# நமது நோக்கு

## மோதல் நிலை - அணுகுமுறை மாற்றம்!

இருபதாம் நூற்றுண்டின் இறுதித் தசாப்தம் தொடங்கி இரண்டு மாதங்கள் கழிந்துவிட்டன. உலக அரசியலில் புதிய நம்பிக்கைகள் உருவாகி வருகின்றன.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இவ்வளவு விரைவில் புயல்வீசும் என யார் எதிர்பார்த்தார்கள்?

தென்னுபிரிக்காவில் இருந்த இனஒதுக்கற்கொள்கையை ஐ. நா. சபையே ஆண்டுகள் தோறும் இடித்துரைத்தது; கண்டனத் தீர்மானம் நிறைவேற்றி வந்தது.

அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்; இன்று ஆட்சிகளும் அணுகுமுறைகளை மாற்றும் கோலத்தைக் காண்கிறோம்.

நெல்சன் மண்டேலா விடுதலையோடு தென்னுபிரிக்காவிலே பேச்சுவார்த்தை மூலம் நெருக்கடிகளுக்குத் தீர்வுகாணும் புதிய அணுகுமுறை ஆரம்பமாகியுள்ளது.

கிழக்கு - மேற்கு ஜேர்மனிகள் எதிர்பார்த்ததைவிட வெகுவிரைவில்இணைய இருக்கின்றன. ஆண்டாண்டு காலமாக இருந்த அரசியல் 'தலையிடி' விரைவில் நீங்கிவிடும். இதிலே சந்தேகம் இல்லை. இப்படி உலகெங்கும்இருந்து வந்த நெருக்கடிநிலை-பனிப்போர் - மோதல்நிலை நீங்கி வரும் இந்த வேளையில்-

''மோதல் முறைக்குப் பதிலாக சமரசப் போக்கு மூலம் பிரச்னைகளைத்தீர்த்து வைக்கத் திடசங்கற்பம் கொண்டுள்ளேன்!'' இப்படி இலங்கை ஜனுதிபதி வலியுறுத்தியுள்ளார்.

தமிழ் பேசும் மக்களின் பிரச்னை சம்பந்தமாகச் சென்ற தூதுக்குழுவிடம் அவர் உறுதிமொழி கூறியிருக்கிறார். இது ஒரு ஆறுதல் தரும் செய்தி!

எமது பகுதி சந்தித்த இன்னல்கள்தான் எத்தனை? கண்ட இடிபாடுகள்தான் எவ்வளவு?

எமது பிரதேச இளைஞர் விளைத்த உரிமைப்போரை அடக்க, இராணுவத் தீர்வில் நம்பிக்கைவைத்துக் கண்டபலன் என்ன?

பாதுகாப்புச் செலவிற்கே ஐநூறு கோடிக்கு மேற் சென்றிருக்கிறது. காயமுற்ற ஊனமுற்ற இராணுவத்தினர் எத்தனைபேர்? அவர்களுக்கான நட்டஈடுகள் எவ்வளவு? ஊக்குவிப்புகள்தான் எவ்வளவு?

சொந்த மூளை போதாதென வந்த மூளைகள்தான் எவ்வளவு? செய்து பார்த்த சாகசங்களும் வெற்றிகண்டனவா?

எனவேதான் மோதல் நிலையைத் தவிர்த்து பேச்சுவார்த்தை மூலம் பிரச்னைகளைத் தீர்க்க ஜனுதிபதி முன்வந்துள்ளார்.

தென்னிலங்கையிலே அவர் 'பட்டபாடு' போதும் போதும் என்ருகிவிட்டது. மேலும் பட்டுத்தான் அறிய வேண்டுமா?

நெருக்கடிநிலை தளர்ந்து மக்கள் அன்ருட வாழ்வை மீண்டும் தொடங்க இடையூருக இருப்பதற்கான காரணிகள் கண்டறியப்பட வேண்டும்.

அடுத்து என்ன நடக்குமோ என்ற எண்ணம் மனநெருடல்,ஆகியவற்ருல் பலரது உள்ளம் இன்னும் வழமைக்கு வரவில்லை.

இந்த வகையில்ஜனுதிபதியின புதிய அணுகுமுறை ஆறுதலையும்அமைதியையும் தரும் என நம்புவோமாக!

## ''கெரில்லா இயக்கங்களில் 'புலிகள்' தலைசிறந்தவர்கள்''

### நெடுமாறன் கருத்து

(யாழ்ப்பாணம்)

''உலகக் கெரில்லா போர் இயக்கங்களில் தமிழ் ஈழவிடுதலைப்புலிகள் தலை சிறந்தவர்கள். பிரபாகரன் கெரில்லா தலைவர்களில் மிகவும் உன்னதமான தலைவர். இந்தியாவில் கூட பல ஏழை மக்களை பணக்கார வர்க்கம் நசுக்கிய வண்ணமிருந்தது. அவர்களுக்குக் கூட அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தியவர்கள் இந்த தமிழ் ஈழ விடுதலைப்புலிகள்தான்.''

இவ்வாறு தமிழக அரசியல் தலைவர் திரு. ப. நெடுமாறன் ஊர்காவற்றுறையில் நடைபெற்ற தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் முன்னணிக் கட்சிக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கூட்டத்துக்கு ஏராளமான மக்கள் சமுகமளித்திருந்தனர். (ம)

## முஸ்லிம் தூதுக்குழு நாடு திரும்பியது

(கொழும்பு)

முஸ்லிம் நாடுகளுக்குசென்ற அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் குழு நாடு திரும்பியது. இக்குழு பல நாடுகளிலும் இலங்கையில் முஸ்லிம்களின் நிலை தொடர்பாக பேச்சுக்களை நடாத்தியுள்ளது.

இத்தகவலை கட்சியின் தலைவர் ஜனுப் எம். எச். எம். அஸ்ரப் தெரிவித்தார். மேற்படி குழுவிற்கு கட்சியின் உப தலைவர் ஜனுப் அப்துல் ரசூல் தலைமை தாங்கிச் சென்ருர்.

இலங்கையில் அண்மைக் காலங்களில் இடம்பெற்று வரும் அரசியல் மாற்றங்களையும் இக்குழுவினர் அந்தந்த நாடுகளுக்கு தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

★ தனியார் கல்விநிலையங்களின் கண்ணேட்டம்:

# ''வகுப்புகளுக்கு வராமல் 'ரியூசன்' செல்பவர்களுக்கு தண்டனையுண்டு!''

### திருமதி எல். பி. ஜெயவீரசிங்கம்

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அதிபர்)

தமிழ்ப் பகுதிகளில் அண்மைக் காலத்தில் தனியார் கல்வி நிலையங்களின் ஆக்கிரமிப்பு காணப்படுவது துர்அதிர்ஷ்டவசமானது. எமது கல்லூரியைப் பொறுத்தவரையில் அன்றும் இன்றும் எமது மாணவிகளுக்கு பூரணமான கல்வியையே வழங்கி வருகின்ருேம். தேவையேற்படும்போது விசேட வகுப்புக்கள் நடைபெறுகின்றன. பரீட்சைக்கு தயார் நிலைக்கு ஏற்றவாறு வினு-விடை வகுப்புக்களும் நடைபெறுகின்றன. ஆனுல் மாணவர்கள் தான் விசேட வகுப்புகளுக்குசமுகம்கொடுக்க தவறிவிடுகின்றனர்.

இம்மாதிரியாக விசேட வகுப்புகளுக்கு சமுகம்கொடுக்காமல் ''ரியூசன்'' களுக்கு செல்லும் மாணவிகளை தண்டித்து வருகின்ருேம். அவர்கள் பரீட்சைகளுக்கு சமுகம் கொடுக்கும் போது பத்து நிமிடங்கள் கழித்தே வினுத்தாள் வழங்கப்படுவது கல்லூரிநடைமுறை. இதனைக் கூட மாணவிகள் ''ரியூசன்'' மோகத்தால் பொருட்படுத்துவது கிடையாது.

இன்று மாணவர் மத்தியில் தவருன கருத்துக்கள் ஊட்டப்படுவதனுலேயே, அவர்கள் தனியார் கல்வி நிலையங்களை நாடுவதற்கான அடிப்படைக் காரணமாகும். ''ரியூசன்'' எடுத்தால் தான் ''கம்பஸ்'' போகலாமென்பது அவர்கள் சிந்தனையாகும். அது தவருனது.

ரியூசன்களுக்கு செல்பவர்கள் சுயமாக சிந்தித்து விடையெழுத முடியாமல் தவறுவதை நாங்கள் அவதானித்திருக்கிருேம். ரியூசனுக்கு செல்லாதவர்கள் எந்த வித குழப்பமுமில்லாமல் தாம் பெற்ற கல்வியைப் பூரணமாக விளங்கி சுயமாக சிந்தித்து விடையெழுதி அதிக புள்ளிகளைப் பெற்றிருக்கிருர்கள். முன்னையவர்கள் எல்லாம் ''ரியூசன்'' எடுக்காமல் கல்லூரிப் படிப்பிலே முதன்மைபெறவில்லையா?

''ரியூசன்''களுக்கு செல்பவர்கள் பாடசாலைகளில் போதனை நடைபெறும்போது விளையாட்டுத்தனமாகஇருந்துவிட்டு அதனை திரும்பி கற்பதற்காகவே தனியார் கல்வி நிலையங்களை நாடுகின்றனர். இது அவர்களை பொறுப்பற்றவர்களாக வளரவாய்ப்பு ஏற்படுத்துகிறது. சுருங்கச் சொன்னுல் பாடசாலைக்கு ஒழுங்காக சமுகம் கொடுத்து பாடவிதானங்களை பூரணமாகக் கற்று பாடசாலைகளில் நடைபெறும் பரீட்சைகளுக்கு தோற்றினுல் நிச்சயமாக ஒரு மாணவி அதிக புள்ளிகளைப் பெற்று உயர் கல்விக்கு தேர்ந்தெடுக்கப்படலாம். அதற்காக தனியார் கல்வி நிலையங்களை நாடவேண்டிய அவசியமில்லை.

பாடசாலைகளில் நடைபெறும் போதனையைக் காட்டிலும் தனியார் கல்வி நிலையங்களில் புதுமையான கல்வியெதுவும் போதிக்கப்படுவதில்லை அதனைப் பற்றி யாரும் கவலைப்படவும் வேண்டியதில்லை. ஒரு மாணவருக்கு கல்வி மட்டும் முக்கியமானதல்ல. போதியஓய்வு, ஆரோக்கியமான உடல்நிலை, சுயமான சிந்தனை, பொழுதுபோக்கு அனைத்தும் சேர்ந்தது தான் பாடசாலைக்கல்வி.

(நாளைய இதழில் பொன்ட் கல்வி நிலைய அதிபர் என். ஆனந்தகுமார் தமது கருத்தை கூறுகிருர்)

## கிளிநொச்சியில் வைத்தியர்கள் பற்றுக்குறை நிவர்த்திக்க கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட அரசினர் வைத்தியசாலைக்கு நிரந்தரமான மாவட்ட வைத்திய அதிகாரியும் போதியளவு டாக்டர்களும் இல்லாமையால் இவ் ஆஸ்பத்திரியின் வைத்திய சேவைகள் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது:

மாவட்ட வைத்திய அதிகாரியையும் டாக்டர்களையும் நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரை மகஜர் ஒன்றின் மூலம் கேட்டுள்ளனர். [83]

## வடமராட்சியில் கால்நடை வளர்ப்புக்குஉதவ பல திட்டங்கள் அறிமுகம்

(பருத்தித்துறை]

வடமராட்சியில் கால்நடை வளர்ப்போர் சங்கம் கால்நடை வளர்ப்பு அபிவிருத்திக்கான பல திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

சங்க அங்கத்தவர்களுக்கு கால்நடை வளர்ப்பை ஊக்குவிப்பதற்கு தலா 5,000 ரூபாவை கடனுக வழங்கவுள்ளது. இதற்கென சங்கம் ஒரு லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

கால்நடை தீனி விற்பனை நிலையமொன்றையும் சங்கம் திறந்து சேவையாற்றவுள்ளது. [illegible] கடன் வழங்கவும், பால் சேகரித்தல், முட்டை கொள்வனவு செய்தல் நடவடிக்கைகளுக்கும் சங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக சங்கத் தலைவர் திரு பீ. மாணிக்கவாசகர் தெரிவித்தார். [52]

## 70 ஆண்டின் பின் நடந்த தேர்தல்

[மாஸ்கோ]

70 ஆண்டு காலத்துக்குப் பின்னர் முதல்முறையாக சோவியத் யூனியனிலுள்ள லித்துவேனியா மாகாணத்தில் தேர்தல் நடைபெற்றது. லித்துவேனியா லற்வியா போன்ற மாகாணங்கள் சுயாட்சிகோரி போராடி வருவது அறிந்ததே.

## யாழ் இந்துமகளிர் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இநது மகளிர் கல்லூரிப் பரிசளிப்புவிழா யாழ். இந்துமகளிர் கல்லூரி பிரதான மண்டபத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக பிரதிக் கல்விப்பணிப்பாளர் செல்வி திலவதி பெரியதம்பியும், சிறபயு விருந்தினராக கோட்டக்கல்வி அதிகாரி திரு. சி. தியாகராசாவும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள். (க)

# பலதும் பத்தும்

### தொல்பொருள் ஆய்வு

இன்று எங்கும் புனரமைப்புக்கள் பற்றியே பேச்சு!

எமது பண்டைய கலை, கலாச்சாரமும் புத்துயிர் பெற, புனரமைப்புப் பெற சிந்தனை மலர்ச்சி ஏற்பட்டு வருகிறது.

பூநகரி பற்றிய தொல்பொருள் ஆய்வில் ஈடுபட்டு வருபவர் திரு. ப. புஷ்பரட்ணம் அவர்கள்.

அண்மையில் ஓர் ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்திருக்கிருர் கருத்தரங்கொன்றில். அதனைத் தொடர்ந்து ஆரோக்கியமான கருத்துச் சர்ச்சை!

பேராசிரியர்கள் சோ. பத்மநாதன், கா. சிவத்தம்பி, க. சிற்றம்பலம் ஆகியோர் உட்படப்பலர் பங்குபற்றியிருக்கிருர்கள் என்ருல் கேட்கவும் வேண்டுமா?

'சர்ச்சை' எப்படியிருந்தாலும் தொல்பொருள் ஆய்வு தொடரட்டும்!

### கேள்வி - பதில்

கேள்வி: கோழி உணவு விலை அதிகரித்ததேன்?

பதில்; கோழி உணவில் 30 சதவீதம் சோளன் பயன்படுத்தப்படுகின்றது. அதன் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டது. சுமார் ஐயாயிரம் ரூபாவிற்கு உள்ளூரில் உற்பத்தியானஇந்தச் சோளத்தை ஏழாயிரத்துக்கு மேல் 'கட்டி அழுது' இறக்குமதி செய்யவேண்டி வந்துவிட்டதாம்.

கோழி வளர்க்கவேண்டுமாயின் சோளன் உற்பத்தியும் இங்கு பெருக வேண்டாமோ?

வாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடுகள் நிர்மாணித்தல்:
# "சரியான வழிகாட்டல் மூலம் செலவினைக் குறைக்கலாம்"

(யாழ்ப்பாணம்)

"வீடுகளை நிர்மாணிப்பதற்குச் சரியான தொழில் நுட்பமும் சிறந்த வழிகாட்டலும் அவசியமாகும். இன்று சிறிய வீடொன்றை நிர்மாணிப்பதற்கு இரண்டு லட்சம் ரூபாவுக்குமேல் தேவைப்படுகிறது. எனவே வீட்டைக் கட்டுவதற்குமுன்னர் செலவினை எவ்வாறு குறைக்கலாமென்பதை சம்பந்தப்பட்ட தொழில் நுட்பம் மிக்கவர்களுடன் கலந்தாலோசித்து திட்டமிடுவது அவசியமானதாகும்."

இவ்வாறு, யாழ்ப்பாணப் பொறியியலாளர் நிறுவனம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஏற்பாடு செய்திருந்த 'குறைந்த செலவிலான வீட்டை அமைப்பதற்கான வழிமுறைகள்' என்ற தலைப்பிலான கருத்தரங்கில், அமைப்பின் தலைவர் திரு ஏ. சி கிருபராஜா தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், "பலர் வீடுகளை நிர்மாணிக்கும்போது அநாவசியமான வேலைகளுக்கு எதுவித பிரயோசனமுமின்றி செலவு செய்வதால், வீடு கட்டும் செலவு அதிகமாகிக்கொண்டே போகிறது. வீடுகள் எப்போதும் சுகாதார வசதி, தேவையானவு இட வசதி, ஆடம்பரச் செலவினங்களைக் குறைப்பது, சிமெந்தின் பாவனைகளை தொழில் நுட்பத்திற்கு அமைவாகப் பயன்படுத்துவது போன்ற செயல்களின் மூலம் செலவைக் குறைக்கலாம். இன்று ஒரு சதுர அடி விஸ்தீரணமுளள கட்டிடத்தை அமைப்பதற்கு 375 ரூபா செலவாகிறது. முன்பு இது 250 ரூபாவாக இருந்தது. ஆகவே, வீடுகள் கட்டமுன்னர் சரியான வழிகாட்டலில் திட்டமிடுவதன் மூலம் செலவினங்களைக் 'மட்டுப்படுத்தலாம்'' என்றார்.

கருத்தரங்கில் கேள்விகளுக்குப் பதிலளிக்கப்பட்டது. பொருட்காட்சி ஒன்றை இந் நிறுவனம் விரைவில் நடத்தவும் தீர்மானம் மேற்கோள்ளப்பட்டது. (12)

# பனந்தும்பு சுத்திகரிப்பு நிலயம் விரைவில் வவுனியாவிலும் அமையும்

## விரைவுபடுத்துமாறு உத்தரவு

[மட்டுவில்]

பனந்தும்பு சுத்திகரிப்பு நிலையம் ஒன்றினை உடனடியாக வவுனியாவில் நிறுவும்படி பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் கொழும்பிலிருந்து, யாழ்ப்பாணத்திலுள்ள பனை அபிவிருத்திச் சபைக்கு அறிவித்துள்ளார்.

பனை அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. கே. நடராஜாவின் இப் பணிப்புரையைத் தொடர்ந்து பனந்தும்பு உற்பத்தி பகுதிக்குப்பொறுப்பான அதிகாரி திரு. எஸ். வயிரமுத்து உடனடியாக வவுனியாவுக்குச் சென்றுள்ளார்.

பனந்தும்பு இறுதி சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான கட்டிட வேலைகள் மார்ச் மாத முற்பகுதியில் வவுனியாவில் ஆரம்பமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிறநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்குத் தகுதிவாய்ந்த பனந்தும்பு உற்பத்திகளையே இறுதியாக இந்த சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிப்பு செய்யப்படும் என்றும் திரு. வயிரமுத்து மேலும் தெரிவித்தார், [82]

## கொள்ளை

(திருகோணமலை)

திருகோணமலை மலேரியாத் திணைக்களத்தில் 64,375 ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

ராணுவ சீருடையில் துப்பாக்கி ஏந்திய நபர்கள் இக் கொள்ளையில் ஈடுபட்டனர் என அறியப்படுகிறது. இந்தப் பணம் மரண சகாய நிதியாக மக்களுக்கு வழங்கப்படவிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## உங்கள் பிரச்சனை என்ன?

அரச, கூட்டுத்தாபன, தனியார் நிறுவனங்கள் சம்பந்தமாக எழும் பிரச்சனைகளை நீங்கள் எழுதி அனுப்புங்கள்.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு, அதற்கான பதில்களைக் காலக்கிரமத்தில் வெளியிட முடிவுசெய்துள்ளோம்.

நீங்கள் எழுதவேண்டிய முகவரி:

"உங்கள் பிரச்சனை" ஈழநாடு,
த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்.

## வடக்கு - கிழக்கில்
# "சிங்களவர்கள் குடியேறினால் தாயகத்தை இழந்துவிடுவோம்"

டொமினிக் பேட்டி

[கொழும்பு]

வடக்கு - கிழக்கு தமிழர்களின் தாயகப்பகுதி இதுவே விடுதலைப் புலிகளினதும் தாயகப்பகுதி, சிங்கள மக்கள் இங்கு குடியேறினால் தமிழர்கள் தமது பகுதியை இழந்துவிடுவார்கள்"

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்ரான்லி டொமினிக், கொழும்புஆங்கிலப்பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் குறிப்பிட்டார். இப் பேட்டியின் விபரம் வருமாறு:

கே: விடுதலைப் புலிகள் அரசியல் நீரோட்டத்தில் கலந்து விட்டார்கள். பின்னர் ஏன் ஆயுதங்களை வைத்திருக்கிறீர்கள்?

ப: அமைதிப்படை யாழ்ப்பாணத்தின் முழுப்பகுதியிலிருந்து இன்னும் முற்றாக வெளியேறவில்லை. ஏனைய தமிழ்க் குழுக்களும் ஆயுதங்களை வைத்திருக்கின்றன. எனவே நாம் எவ்வாறு ஆயுதங்களை கைவிட முடியும்.

கே; அமைதிப்படை வெளியேறியதும் ஆயுதங்களை என்ன செய்வீர்கள்?

ப: அதன்பின் எமக்கு ஆயுதங்களின் தேவை இருக்கமாட்டாது.

கே: ஆயுதங்களை இலங்கை அரசிடம் ஒப்படைப்பீர்களா?

ப; இலங்கை அரசுடன் பேச்சுக்கள் நடைபெற்று வருகிறது. இதன் முடிவில் என்ன செய்யவேண்டும் என்பது பற்றி தீர்மானிக்கப்படும்.

கே: திரு. பிரபாகரனை சந்திக்க முடியுமா?

ப: அவரது இடத்தை சென்றடைவது சிரமமான பயணமாயிருக்கும். அதற்கு ஒருவாரம் செல்லும். நீங்கள் அவரை சந்திக்க விரும்பினால் அதற்கு ஏற்பாடு செய்கிறோம்.

கே: 'றோ'வைப் பற்றியும் அதன் செயற்பாடுகள் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

ப: வடக்கு-கிழக்கில் அவர்களிற்கு 'ஏஜென்சிகளோ அனுதாபிகளோ இல்லை. கொழும்பில் இருக்கலாம்.

கே: வடக்கு - கிழக்கு மாகாணசபைக்கு மீண்டும் தேர்தல் நடைபெற்ற பின் அங்கு சிங்கள அகதிகளை மீண்டும் குடியேற்ற அனுமதிப்பீர்களா?

ப: வடக்கு - கிழக்கு தமிழர்களின் தாயகப் பகுதி இதுவே விடுதலைப் புலிகளினதும் தாயகப்பகுதி. சிங்களவர்கள் இங்கு குடியேறினால் தமிழர்கள் தமது பகுதியை இழந்துவிடுவார்கள். இதுவிடயம் தொடர்பாகவும் அரசுடன் பேச்சுக்கள் நடைபெற்று வருகிறது. இதன்பின் முக்கிய முடிவுகள் எடுக்கப்படும்.

கே: விடுதலைப் புலிகள் நிதியை எவ்வாறு சேகரிக்கிறார்கள்?

ப; கமத்தொழிலில் ஈடுபடுகிறோம். எமது ஆதரவாளர்களும் நிதியுதவி அளிக்கிறார்கள்.

கே: அரசுடனான பேச்சுக்கள் வெற்றியளிக்குமென எதிர்பார்க்கிறீர்களா?

ப: ஆம்.

கே: பேச்சுக்களில் பிரபாகரன் கலந்துகொள்வாரா?

ப: இறுதிப் பேச்சுக்களில் கலந்துகொள்ளலாம்.

கே: அமைதிப்படை வெளியேறிய பின் விடுதலைப் புலிகள் இலங்கை பொலிசாருக்கும், பாதுகாப்புப் படைக்கும் ஒத்துழைப்பு வழங்குவார்களா?

ப: பொலிசார் தமது கடமைகளை செய்யலாம். இதில் நாம் தலையிடமாட்டோம். இங்கு அமைதி நிலவுவதால் இராணுவத்தினர் தேவையில்லை.

கே; விடுதலைப் புலிகளுக்கும் பொலிசார், பாதுகாப்பு படையினருக்குமிடையில எதிர்காலத்தில் மோதல்கள் உருவாகுமா?

ப: நாம் பொலிசாருடன் ஒத்துழைப்போம். பாதுகாப்பு படையினரின் விடயத்தில் தலையிடமாட்டோம். அமைதியைக் குழப்பும் பட்சத்தில் நாம் தலையிடவேண்டி ஏற்படும். ஆனால் இது நிகழுமென நினைக்கவில்லை.

கே: யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகத்தில் புலிகள் தலையீடு இருக்கிறதா?

ப: இல்லை. சிவில் நிர்வாகம் சுமுகமாக இருக்கிறது. (சி)

# நிறுத்தல் படிகளில் மோசடி கண்டுபிடிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த காலங்களில் பாவனைக்கிருந்த நிறுத்தல் படிகளில் பெரும்பாலானவை நூறு கிராமுக்கு குறைவாக இருப்பதை கண்டு பிடித்துள்ளதாக யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட நிறுத்தல் அளத்தல் பகுதி பொறுப்பதிகாரி கே. நாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

திணைக்களம் சகல வர்த்தகர்களுக்கும் விடுத்தவேண்டுகோளுக்கமைய சகல நிறுத்தல் அளத்தல் கருவிகளை முத்திரையிடுமாறு பணித்திருந்தது.

இப்பணி யாழ்ப்பாணத்திலும கிளிநொச்சியிலும் நடைபெற்று வருகின்றது, இது வரை முத்திரையிடுவதற்கு வந்த பெரும்பாலான ஒரு கிலோ, ஐநூறு கிராம் படிகளில் நூறு கிராம் குறைவாகவுள்ளதை அவதானிக்க முடிகிறது.

இப்படிகளுக்கு நூறுகிராம் ஈயம் பின்புறமாக அடைத்து முத்திரையிட்டு வருகின்றோம் கூடிய விரைவில் அதிகாரிகள் நிறை குறைவான படிகளை கண்டுபிடித்து சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார். கடந்த மூன்றாண்டுகளாக நிறுத்தல் அளத்தல் கருவிகள் திணைக்களத்தால் முத்திரையிடப்படாமையால் இம்மோசடிகளை வர்த்தகர்கள் செய்துள்ளனர். (12)

# உரங்களின் விலையை குறைக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

உரங்களின் விலை ஏற்றத்தினால் விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர் என்றும் உற்பத்தியிலும் பெரு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் அதற்கு நிவாரணம் பெற்றுத் தரும்படி நல்லூர் கமநல சேவைக்குழுவினர் கமநல சேவை உதவி ஆணையாளர் ஊடாக அரசாங்க அதிபருக்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

மெற்றிக்தொன் இப்பொழுது உரங்கள், யூரியா 3745 ரூபாவிலிருந்து 8155ரூபாவும், வி 1, 3825ரூபாவிலிருந்து 9695 ரூபாவும், ரி டி எம் 3815 ரூபாவிவிருந்து 8505ரூபாவாகவும், ஏ பி எம் 3665 ரூபாவிலிருந்து 7875 ரூபாவும் அரசாங்கம் விலையை உயர்த்தி உள்ளது. (ம)

# தென்மராட்சியில் நடந்த மௌன ஊர்வலம்

(மட்டுவில்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தென்மராட்சி மாணவர் அமைப்பு கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலிருந்து சாவகச்சேரி இந்துக்கலலூரி வரை மாபெரும் மௌன ஊர்வலம் ஒன்றை நடத்தியது.

இதில் ஆயிரக் கணக்கான மாணவர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டனர். இது மாணவர் அமைப்பின் மாபெரும் சாதனையாக அமைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணி வரை சுமார் 6 மைல் தூரம் இந்த மௌன ஊர்வலம் சுலோக அட்டைகளை ஏந்திய வண்ணம் நடைபெற்றது. டலையிலிருந்தும் பெருந்தொகையான மாணவ, மாணவியர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில இதுவரை உயிரிழந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள், மாணவர்கள் பொதுமக்கள் ஆகியோருக்கு அஞ்சலி செய்யும் முகமாகவே இந்த மௌன ஊர்வலம் மேற்கொள்ளப்பட்டது.

ஊர்வலம் இந்துக் கல்லூரியை வந்தடைந்ததும் கல்லூரியில் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக் கூட்டததில் தமிழ்நாடு விடுதலைப் புலிகள் தோழமைக் கழக பிரமுகர் திரு. ராமகிருஷ்ணன் உட்படப் பலர் உரையாற்றினர். (82)

# புத்தாண்டுக்கு முன்னர் இலங்கை இந்திய ஒப்பந்தம்

(கொழும்பு)

இலங்கை-இந்திய நட்புறவு ஒப்பந்தம் புத்தாண்டு தினத்துக்கு முன்னர் கைச்சாத்திடப்படலாம் என அறியப்படுகிறது.

இந்த ஒப்பந்தத்தின் நகல் பிரதிகள் மார்ச் மாத ஆரம்பத்தில் இந்தியாவுக்கு அனுப்பிவைக்கப்படலாம் என்று தெரியவருகிறது.

அதே நேரத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே நிலவும் கசப்புணர்வுகள் கொஞ்சம் கொஞ்சமாக நீக்கப்பட்டு வருகின்றன என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (ம)

# முல்லை மாவட்டம் சகஜநிலைக்கு திரும்புகிறது

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தண்ணீரூற்று என்னும் இடத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வட்டார அலுவலகம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டு கட்சியின் வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இப்பகுதியில் உள்ள பொது ஸ்தாபனங்கள், மற்றும் அரச திணைக்கள அதிகாரிகள் புலிகளுடன் தொடர்புகொண்டு பொது மக்களின் நலனுக்காக செயல்பட்டு வருகிறார்கள்.

இதேவேளை முல்லைத்தீவு, பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் பொது மக்களின் நாளாந்த தேவைகளை முன்னிட்டும் தற்போது உள்ள சூழ்நிலையில் சகஜ நிலைமையை ஏற்படுத்தும் நோக்குடனும் தினசரி 8மணி வரை சகல வர்த்தக நிலையங்களும் திறந்திருக்க முல்லை வர்த்தக சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி வடக்கு உ.அ.அ. பிரிவில்

# ஆசிரியர் பயிலுநர்

## தெரிவானோர் விபரம்

(புலோலி)
பருத்தித்துறை
நிருபர்கள்)

மாவட்ட ஆசிரியர்கள் சேவைத்திட்டத்தின்கீழ் ஆசிரியர் பயிலுநராக வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 93 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஆரம்பக் கல்விக்கு 28 பேரும், இந்துசமயத்துக்கு 02 பேரும், றோமன் கத்தோலிக்கத்துக்கு 03 பேரும், றோமன் கத்தோலிக்கரல்லாத கிறிஸ்தவத்துக்கு 1 வரும், ஆங்கிலத்துக்கு 10 பேரும், தமிழுக்கு 05 பேரும், விஞ்ஞானத்துக்கு 05 பேரும், சுகாதாரமும் உடற்கல்விக்கும் 04 பேரும், சமூகக் கல்விக்கு 05 பேரும், சித்திரத்துக்கு 06 பேரும், சங்கீதத்துககு 08 பேரும். நடனத்துக்கு 07 பேரும், வாழ்க்கைத் திறனுக்கு 02 பேரும், விவசாயத்துக்கு 02 பேரும், வர்த்தகத்துக்கு ஒருவரும், தட்டச்சு சுருக்கெழுத்துக்கு ஒருவரும், மரவேலைக்கு ஒருவரும், வானொலிக்கு ஒருவரும் நூல் நிலையத்திற்கு ஒருவரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கீழ்த்தரப்படும் பட்டியலில் தெரிவு செய்யப்பட்டவர்களது சுட்டிலக்கம் முதலாவதாகவும், பெயர் விலாசம் இரண்டாவதாகவும் அவர்கள் பெற்றுள்ள புள்ளிகள் மூன்றாவதாகவும் இடம் பெறுகின்றன.

ஆரம்பக் கல்வி

1015 சோ. நிர்மலாதேவி தும்பளை (666), 0273 நா. நாகேந்திரன் சிவபுரவீதி வல்வெட்டிந்துறை (634), 081 ச. ஜெயரஞ்சினி தம்பசிட்டி (608), 020 ஆ.உமாதேவி வல்வெட்டித்துறை (602), 1327 கு. கோமளா வல்வெட்டித்துறை (598), 882 த. புனிதவதி புலோலி தெற்கு (591), 183 மா.வாசுகி வராத்துப்பளை (591), 416 செ. பிறேமாவதி பருத்தித்துறை (591), 010 இ. நந்தினி வியாபாரிமூலை (582), 1207 த. கமலாம்பிகை பருத்தித்துறை (580), 044 கு. அரியமலர் வல்வெட்டித்துறை (577), 1169 தி. வசந்தமலர் புலோலி தெற்கு (577), 09 சு. ஜெயமதி வல்வெட்டித்துறை (574), 03 த. சிவமணி பருத்தித்துறை (569), 1039 இ. தனலட்சுமி புலோலி தெற்கு (569), 1222 சி. தேவகுமாரி பருத்தித்துறை (566), 448 பொ. இலங்கேஸ்வரி புலோலி தெற்கு (559), 055 த. ஜெயலட்சுமி வல்வெட்டித்துறை (558), 089 கு. அமுதவல்லி அல்வாய் தெற்கு (555), 029 ச. சந்தானலட்சுமி தொண்டமானாறு (551), 418 ந. கலா பருத்தித்துறை (539), 008 கோ. அன்னபூரணம் வல்வெட்டித்துறை (536), 134 ச. சித்திரா தும்பளை (524), 272 இ. சாந்தஸ்வரி பருத்தித்துறை (522, 369 ப. சுஜாத்தா பருத்தித்துறை (522), 116 மா. அமலேஸ்வரி வல்வெட்டித்துறை (521), 290 செ. தவராணி துன்னாலை (521), 017 க. கண்ணன் புலோலி தெற்கு (519).

இந்துசமயம்

030 குமாரி அனுசூரியா வராத்துப்பளை (571), 970 கே. சாந்தா கற்கோவளம் (544).

கிறிஸ்தவம் றோ. க.

086 யூலிஸ்ராணி பருத்தித்துறை (573), 087 அ. மேரி வசந்தா பருத்தித்துறை (582), 090 ஆன் வினிதா புலோலி தெற்கு (543).

கிறிஸ்தவம் றோ. க. அல்லாதது

902 றஞ்சன் செல்வகுமார் அல்வாய் (548).

ஆங்கிலம்

145 ரி சுகந்தன் பருத்தித்துறை (596), 331 எஸ். காஞ்சனா தும்பளை (589) 664 கே சிவதாஸ் பருத்தித்துறை (533), 130 பி.இந்திரா பருத்தித்துறை (53ı), 297 க. சிறிஸ்சந்திரன் வல்வெட்டித்துறை (575), 436 தி. உதயமூர்த்தி அல்வாய் மேற்கு (555), 041 செல்வறஜனி புலோலி தெற்கு (549), 774 செ. சிவராஜா கொற்றாவத்தை (524), 849 த. வேணி புலோலி தெற்கு (520), 950 ஆ. பிறைசூடி புலோலி தெற்கு (519).

தமிழ்

1080 ஐ. சிறிதேவி புலோலி கிழக்கு (550), 058 கே. பரமேஸ்வரி புலோலி (548)' 1007 என். யாதவானந்தன் பருத்தித்துறை (538), 502 கே. குகநாயகி புலோலி தெற்கு (534), 018 கோ. அகல்யலக்சுமி வல்வெட்டித்துறை (523).

விஞ்ஞானம்

122 எஸ். புஸ்பலதா புலோலி மேற்கு (579), 1341 வி.சுகித்திரரஞ்சினி அல்வாய் மேற்கு (562), 115 எஸ். சத்தியபாமா புலோலிதெற்கு (555), 753 சி. முருகதாசன் புலோலி தெற்கு (525), 195 க.சாந்தினி அல்வாய் மேற்கு (524).

சுகாதாரமும் உடற்கல்வியும்

247 ரீ.சுசன்யா வல்வெட்டித்துறை (531), 317 சி சுமதி பருத்தித்துறை (498), 588 கு சாந்தி புலோலி தெற்கு (427), 564 க. சகுந்தலாதேவி துன்னாலை வடக்கு (392),

சமூகக்கல்வி

206 இ. ஞானசௌந்தரி வல்வெட்டித்துறை (608), 299 ந. செல்வராணி புலோலி மேற்கு (592). 052 இ. பத்தினிதேவி புலோலி மேற்கு (579), 470 கே. செல்வராணி புலோலி தெற்கு (531) 093 ச. அமலோற்பராணி பருத்தித்துறை (531),

சித்திரம்

1170 ரீ, கணேஸ்வரன் புலோலி தெற்கு (540). 176 அ பற்றிமாராணி பருத்தித்துறை (610) 521 எஸ். இராஜேஸ்வரி துன்னாலை வடக்கு [533), 1225 செ. இரஞ்சிதமலர் ஓடக்கரை [500], 807 அ. செல்வராணி பருத்தித்துறை [416], 999 யே. கமலா மாதனை [407],

சங்கீதம்

1ь7 எஸ். சந்திரவதனா புலோலி தெற்கு (541), 280 ரி செல்வரதி பருத்தித்துறை (541) 348 வ. ஜெயந்தி தும்பளை [510], 1287 தி. வாசுகி பருத்தித்துறை [504] 048 மு. சாராதாதேவி கெருடாவில் (502), 185 ஆ. செல்வராணி வியாபாரிமூலை (500), 1249 க. பிறேமலதா புலோலி கிழக்கு (495), 233 க. இந்திராணி பருத்தித்துறை [494],

நடனம்

205 தெ. கலைமதி நெல்லண்டை [603]. 207 இ. தமிழ்மலர் புலோலி மேற்கு [580], 204 சண். சந்தியாகுமாரி புலோலி கிழக்கு (568), 211 செ. செல்வராணி பருத்தித்துறை [482], 250 சி. தேவமனோகரி பருத்தித்துறை [469], 212 கு தேவகி வியாபாரிமூலை (429), 214 கோ. வளர்மதி பருத்தித்துறை [417]

வாழ்க்கைத்திறன்

325 பி. சுரேந்திரன் பருத்தித்துறை (582), 0001 ரி. சறோஜினிதேவி பருத்தித்துறை [516],

விவசாயம்

073 இ. ஞானசக்தி பருத்தித்துறை [460], 747 கு பாலகிருஷ்ணன் தும்பளை மேற்கு (359),

728 எம். செல்வச்சந்திரன் பருத்தித்துறை [529]

தட்டச்சும் சுருக்கெழுத்தும்

828 மோ. தவமணி பருத்தித்துறை (520),

மரவேலை

238 என். மகேந்திரராஜா தொண்டமானாறு [536],

வானொலி

1350 எம். ரவீந்திரன் கெருடாவில் [592],

நூல்நிலையம்

244 தங்கமலர் தும்பளை (618),

### வடமராட்சி கிழக்கு

மாவட்ட ஆசிரியர்கள் சேவைத்திட்டத்தின்கீழ் ஆசிரியர் பயிலுனராக வடமராட்சி கிழக்கு [மருதங்கேணி] உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 27 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஆரம்பக்கல்விக்கு 12 பேரும், சமூகக்கல்விக்கு 3 பேரும், விஞ்ஞானத்தில் 2 பேரும், தமிழுக்கு 2பேரும் விவசாயம், சித்திரம், சங்கீதம் ஆகியவற்றுக்கு தலா ஒருவரும் (மொத்தம் 3 பேர்) ஆங்கிலத்துக்கு 5 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கீழ்த்தரப்படும் பட்டியலில் தெரிவு செய்யப்பட்டவர்களது சுட்டிலக்கம் முதலாவதாகவும், பெயர் விலாசம் இரண்டாவதாகவும் அவர்கள்பெற்ற புள்ளிகள் மூன்றாவதாகவும் இடம்பெறுகின்றன.

ஆரம்பக்கல்வி

118 சி. வனிதாமலர் குடத்தனை மேற்கு(622), 017 க. கனகரெட்னேஸ்வரி மணற்காடு (603), 01 மே. ப. ஞானம்பிகா தாளையடி (594), 02 பி. இராசகுமாரி அம்பன் (568), 06 இ சகுந்தலா வெற்றிலைக்கேணி (491), 03 த. சத்தியசீலா உடுத்துறை தெற்கு (496), 04 வி. ஜெயராணி வெற்றிலைக்கேணி (486), 37 செ. சத்தியபாமா உடுத்துறை தெற்கு [489[, 116 பூ. தர்மகுலேந்திரன் தாளையடி [476], 27 செ. புஷ்பவனிதா செம்பியன்பற்று தெற்கு [471], 118 பொ. பொன்னம்பலம் ஆழியவளை [470], 133 வே. ஜெயம் சபாபதி ஆழியவளை (458),

சமூகக்கல்வி

திருமதி சரஸ்வதி திரவியராசா ஆழியவளை (551), 39 வ. சிவபாக்கியம் ஆழியவளை (473), 14 கி. சாந்தகுமார் வத்திராயன் வடக்கு [464],

விஞ்ஞானம்

48 க. சிவசுப்பிரமணியம் நாகர் கோவில் தரவை [548] ь7 வீ. இந்திரலிங்கம் வெற்றிலைக்கேணி [541],

தமிழ்

98 இ. நந்தகுமார் உடுத்துறை தெற்கு [474], 53 ம. றெசிற்று தாளையடி [462],

விவசாயம்

86 த. மங்கயற்கரசி வத்திராயன் தெற்கு [514],

சித்திரம்

82 பி. சாந்தினி குடத்தனை (524),

சங்கீதம்

65 ஸ்கெலன் பிளசிடல் தாளையடி [503],

நடனம்

தெரிவு செய்யப்படவில்லை.

ஆங்கிலம்

38 மே. ஏ. மோகன் தாளையடி [518], 52 சி. சுமத்திராதேவி தாளையடி [498], 59 யோ. மேரி விக்டோரியா கட்டைக்காடு [495], 189 அ. டொமினியரஞ்சன் ஆழியவளை (482), 177 வீ. வில்வராணி தாளையடி [468], (-61)

# இராசி பலன்

27 - 2 - 1990
செவ்வாய்க்கிழமை

துதியை காலை 9. 35வரை உத்தரட்டாதி இரவு 10 ம. 56 நிமி வரை; அமிர்தயோகம் கரிநாள், இராகுகாலம். மாலை 3 ம 30 திகதி முதல் 5ம. 58 வரை, சுபகருமங்களுக்கு ஏற்றதல்ல,

மேடம்:- அறிஞர் சந்திப்பு, விருந்துபசாரம், குடும்ப மகிழ்ச்சி, நண்பருதவி, பொருள்சேர்க்கை,

இடபம்:- மனவேதனை தொழில் பாதிப்பு, அநாவசிய செலவு அதிகாரிகள் தொல்லை, உறவினர் வருகை,

மிதுனம்:- புதிய சிந்தனை, கைப்பொருள் தழுவுதல், தாய்வழிஉறவு, பணவரவு, புதிய பதவி.

கடகம்:- சிறுரோகம். காரியதாமதம். பகைவர் தொல்லை. தொழில் பிணக்கு, வாக்குவன்மை

சிங்கம்:- மனைவியால் புகழ், இடமாற்றம். ஆலய சரிசனம், தொழில்லாபம், கடிதஉறவு.

கன்னி;- திருமணப் பேச்சுக்கள், கடன் வசூல், பயண தொல்லை, அதிக முதலீடு, வாகனயோகம்.

துலாம்:- தெய்வ சிந்தனை, தொழில்மாற்றம், பொதுப் பணி, நண்பருதவி, அதிகாரம்.

விருச்சிகம்:- வைத்திய செலவு, தனிமையான போக்கு, வேலைப்பளு, பெண்களால் கேடு.

தனுசு:- அந்நியவாசம், குடும்பப்பிரிவு, மக்களால் நன்மை, தொழில்லாபம், வேதனை.

மகரம்:- குடும்ப மகிழ்ச்சி. காரிய தாமதம், உல்லாச பயணம், தானதருமம். கடும் சினம்.

கும்பம்:- கடுகடுப்பு, பணச்செலவு தொழில் பிரயாசம், கடன் வசூல், அந்நியநட்பு.

மீனம்:- எதிர்பாராத வெற்றி, தயார் உதவி, தொழில் பாராட்டு, கடும் முயற்சி, காரிய அனுகூலம்.

# இப்படியும் நடக்கிறது

கற்பூரம் மெழுகாகுமா?

இது திரைப்படமல்ல; உண்மைச் சம்பவம்!

திருக்கேதீச்சரத்தில் விற்பனைசெய்யப்பட்ட கற்பூரத்தில் சில, போலியாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கற்பூரம் என்று 'லேபல்' இடப்பட்டு உள்ளே வெறும் மெழுகு விற்கப்பட்டதாம் இந்தப் போலி விற்பனையால் ஏராளமான பக்தர்கள் ஏமாந்தனர் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் போலி கற்பூர விற்பனையில் ஈடுபட்ட சிலர் சென்ஜோன் அம்புலன்ஸ் தொண்டர்களினால் மடக்கப்பட்டு 'உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனராம்.

கலப்படத்தில்தான் எத்தனை ரகம்?

★

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையைச் சேர்ந்த சிலர் அண்மையில் கொழும்பு சென்று, சுகாதார மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுஹா ஹெரத்தை அவரது அமைச்சில் வைத்து சந்தித்தனர்.

வைத்தியசாலையில் நிலவும் பற்றுக்குறை மற்றும் தேவைகள் பற்றி தூதுக்குழுவினர் விபரமாக விளக்கினார்கள்.

அமைச்சரும், அமைச்சின் செயலாளர் டாக்டர் ரெஜி பெரேராவும் தூதுக் குழுவினரின் கருத்துக்களை மிகவும் உன்னிப்பாகக் கேட்டறிந்தனர்.

இது வந்த செய்தி. வராத செய்தி: அமைச்சரும், அமைச்சின் செயலாளரும் அடிக்கடி தமிழிலேயே பேசினார்கள்.

— ஊடுருவி

## கடமையில் தவறுவோர்மீது கடும் நடவடிக்கை

[காங்கேசன்துறை]

வலி. வடக்கு பிரதேசசபையின் உப-அலுவலகங்களில் பணிபுரியும் சகல தர தொழிலாளர்கள், காவலாளர்கள் போன்றோரின் கடமைகளைக் கண்காணித்து கடமையில் தவறுவோர்மீது கண்டிப்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

வலி. வடக்கு பிரதேசசபையின் விசேட ஆணையாளர் திரு. வி. இராசையா இது தொடர்பான சுற்றுநிருபம் ஒன்றை வலி. வடக்கு பிரதேச சபையின் கீழ் இயங்கும் உப-அலுவலகங்களின் பொறுப்பதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். அச்சுற்று நிருபம் தெரிவிப்பதாவது:

சகலதர தொழிலாளர்கள் காவலாளிகள் போன்றோரின் கடமைகளைக் கண்காணித்து மேற்பார்வை செய்தல், அந்தந்த உப அலுவலகங்களின் தொழில்நுட்ப அலுவலர்களின் பிரதான கடமைகளில் ஒன்ருக சேர்த்துக்கொள்ளப்படவேண்டும். சரியான நேரத்திற்கு சமுகமளித்தல், கடமை நேரத்தில் முழுமையாக கடமையில் ஈடுபட்டிருத்தல், கடமை முடியும் உரிய நேரம் வரை கடமை புரிதல் ஆகியவற்றில் மிக கண்டிப்புடனும், அவதானத்துடனும் நடந்துகொள்ளுமாறு உப அலுவலக தொழில்நுட்ப அலுவலர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். [86]

## படுகாயம்

[யாழ்ப்பாணம்]

வயல் வெளியில் கட்டுத் துப்பாக்கி வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்தார்.

ஓமந்தை கொந்தக்காரன் குளத்தில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஐயாத்துரை பாலசிங்கம் [வயது 42] என்பவரே படுகாயமடைந்தவராவார்.

வயலில் காவலுக்கு சென்ற வேளையில் வயலுக்குள் நுழைந்த மாடுகளை கலைத்துச் செல்லுகையில் வயல் வேலிக்கப்பால் வைக்கப்பட்டிருந்த கட்டுத்துப்பாக்கியில் சிக்குண்டதால் இவர்படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## மாணவருக்கு நிதிஉதவி

[யாழ்ப்பாணம்]

மகாபொல உதவித்தொகை பெறுதிருக்கும் யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 25 மாணவர்களுக்கு துணைவேந்தர் நிதியத்திலிருந்து உதவிகள் வழங்கப்படுகின்றன. [ம]

## யாழ். வைத்தியசாலை நலன்புரிச்சங்கம்

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனா வைத்தியசாலையின் நோயாளர் நலன் புரிச்சங்கம் மூன்று வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் இயங்கவுள்ளது. [56]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதிய நிர்வாகிகள்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு செபமாலை மாதா சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது தெரிவு செய்யப்பட்ட புதுவருட நிர்வாகிகள் பின்மாறு:-

தலைவர்: ஏ. எம், பீரிஸ், உப தலைவர்: எஸ். கொக்கின்ஸ் செயலாளர்: ஏ ஜெறில், உப செயலாளர்: ஏ. சி. ஜெயந்தன். பொருளாளர்: எம் ஸ்ரனிஸ்ரேஸ்.

செயற்குழு உறுப்பினர்களாக ஆறுபேர் தெரிவுசெய்யப்பட்டனர். (76)

°°°°

(பண்டத்தரிப்பு)

பனிப்புலம் அமபாள் சன சமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது புது வருடநிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப் பட்டர்.

தலைவர்: அ முரளிதரன், உப தலைவர்; ந பாலசிங்கம், செயலாளர்: க சுபாஸ்கரன், உப செயலாளர்: மா. கேதீஸ்வரன், பொருளாளர்: மா. சாந்தகுமார்.

செயற்குழு உறுப்பினராக எட்டுப்பேர் தெரிவு செய்யப் பட்டனர்.

°°°°

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாராயண சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: செ. சண்முகலிங்கம், உப தலைவர்கள்: சி. வாமதேவன், வ. கந்தசாமி, செயலாளர்: கோ. சத்திய குமார், உப செயலாளர், செ. லிங்கராசா, விளையாட்டுச் செயலாளர்: வ. கைலைநாதன்.

ஏழு கமிட்டி உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (56

°°°°

(மட்டுவில்)

வரணி வடக்கு தம்பான் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர்: ஆ. முத்துத்தம்பி, உப தலைவர்: மு. நடேசு, செயலாளர்: வே. கணேசமூர்த்தி, உப செயலாளர்; க. நாகராஜா, பொருளாளர்: வே. தியாகராஜா,

மேலும் ஐவர் கொண்ட ஒரு நிர்வாகக் கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (82)

°°°°

(புலோலி)

அல்வாய் தெற்கு பாரதி தாசன் ஐக்கிய நாணயசங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்:நா. சந்திரசேகரம், உபதலைவர்கள்: ஆ. குலநாதன். ம. மகேந்திரராஜா, செயலாளர்: பெ. கனகசபாதி, உப செயலாளர்: ச. கிருஷ்ணசாமி, பொருளாளர்: க. புவனேந்திரன், உபபொருளாளர்; செல்வி பொ. தயாளினி, கணக்குப் பரிசோதகர்: சி. அருணசலம்.

ஹவுஸ் புல்!!!
ஹரன் யாழ்.
10-30, 2-30, 4-30, 6-30
கமலஹாசன்
சரண்யா
நாயகன்

அத்துடன் ஐவர்கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (61)

°°°°

(கோப்பாய்)

கோப்பாய் வடக்கு சன சமூக நிலையத்தில் நடைபெற்ற வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: மு. கிருபானந்தம், செயலாளர்; செ. சண்முகலிங்கம், பொருளாளர்: த. ஞானகரன்.

நிருவாக சபை உறுப்பினாகளாக ஒன்பதுபேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

°°°°

[புங்குடுதீவு]

புங்குடுதீவு நசரேத் சன சமூக நிலைய நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவாகினர்.

தலைவர் யோ. றிச்சாட் டோமினிக், செயலாளர் எஸ் ஞானரெத்தினம், பொருளாளர் ம. மரியதாஸ், உப தலைவர் திருமதி அ. யசிந்தாமேரி [புனிதம்], உப செயலாளர் எஸ். அந்தோனிப்பிள்ளை, உப பொருளாளர் மா. ஜீவரெத்தினம், 11 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவாகினர். [101]

°°°°

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வருடாந்த கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாக உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் டி. ஆர். அருமைநாயகம், உப தலைவர்கள் எம். நடராஜசுந்தரம், சி. நடராஜலிங்கம், எஸ். இராசேந்திரம், எம். கே. முத்துக்குமாரு வி. சேதுநாயகம், இணைச்செயலாளர்கள்: கே. வி. செல்வராஜன், எஸ். சுந்தரமூர்த்தி, பொருளாளர் வி. சிவசிதம்பரமும் செயற்குழு உறுப்பினர்களாக 11 பேர் தெரிவு செய்யப்பட்டனர். (52)

°°°°

(கொக்குவில்)

கொக்குவில் மேற்கு சன சமூக நிலையத்தின் வருடாந்த கூட்டம் திரு. இ. தவராஜலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் இ. தவராஜலிங்கம், செயலாளர் சி. மதன்மோகன், பொருளாளர் ச ஆனந்தராசா, விளையாட்டுத் தலைவர் வே. தளையசிங்கம், நூலகப் பொறுப்பாளர் இ. முரளீதரன். மற்றும் 9 பேர் நிர்வாக உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

## அதிக சித்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கோட்டப் பிரிவில் 300 மாணவர்கள் ஐந்தாம் வகுப்புப் புலமைப்பரீட்சையில் சித்தியெய்தியுள்ளனர். இதில் யாழ். பொஸ்கோ வித்தியாலயத்தில் 70 மாணவர்கள் சித்திபெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## யாழ். பல்கலைக் கழகத்துக்கு 6 கோடி ரூபா

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழகத்துக்கு பல்கலைக் கழக மானியக் குழு 6 கோடி ரூபா நிதியுதவி அளிக்க முன்வந்துள்ளது.

இதன் முதல் கட்டமாகக் கிளிநொச்சி விவசாய பீடத்துக்கு ஒன்றரைக் கோடி ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. (ம)

## எழுதுவினைஞர் சேவை தமிழர் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

பொது எழுதுவினைஞர் அதிவிசேட பரீட்சையில் தமிழர் எவருக்குமே பதவியுயர்வு வழங்கப்படவில்லை. இந்த நேர்முகப்பரீட்சைக்கு மூன்று தமிழரும், இரண்டு முஸ்லிம்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

120 பேர் அழைக்கப்பட்டிருந்தும் பதினைந்து சிங்களவர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வடக்குக்கிழக்கில் இப்பதவிக்கு பல வெற்றிடங்கள் உள்ளனவென்பது குறிப்பிடத்தக்கது. (ம]

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜூன் மாதம் ஏழுலட்சத்திப பதினெட்டாயிரத்தி அறுபது ரூபாவை நிவாரணப் பணமாக வழங்கியுள்ளதாக இந்நிறுவனத்தின் பதில் தலைவர் அ. நல்லதம்பி தெரிவித்துள்ளார்.

இவ்வுதவிகளில் வன்செயல்களில் பாதிக்கப்பட்டு உயிரிழந்த குடும்பங்களுக்கு ஐம்பத்தையாயிரம் ரூபாவும், கட்டிட நிர்மாணங்களுக்கு நாற்பத்தாறுயிரம் ரூபாவும், வீடிழந்தவர்களுக்கு தற்காலிக கொட்டகைகளை நிர்மாணிக்க மூன்று லட்சத்தி அறுபதினாயிரம் ரூபாவும், குரும்பசிட்டிப் பகுதியில் ஆடுகளை வளர்ப்பதற்கு கடனாக ஒருலட்சத்தி பன்னீராயிரம் ரூபாவும், தொண்டர் ஆசிரியர்களுக்கு சம்பளம், கட்டிட வசதிக்காக முப்பத்தையாயிரம் ரூபாவும், மீதித்தொகை வைத்திய வசதிக்காகவும் செலவு செய்யப்பட்டுள்ளன. (12)

## வருடாந்த மெய்வல்லுநர் போட்டி

(பண்டத்தரிப்பு)

விளையாட்டு அமைச்சின் ஆதரவில் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த மெய்வலலுநர் போட்டியை முன்னிட்டு மகளிர் வலைப்பந்தாட்டப்போட்டி, கரபந்தாட்டப் போட்டி, உதைபந்தாட்டப் போட்டி, எல்லே போட்டி போன்று பல்வேறு போட்டிகள் எதிர்வரும் மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ளன.

மகளிர் வலைப்பந்தாட்டப் போட்டி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் மார்ச் மாதம் 4-ம் திகதி நடைபெறவிருப்பதாகவும், 8ம், 9ம் திகதிகளில் கரபந்தாட்டப்போட்டி இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாகவும், 11-ம் திகதி எல்லே போட்டி பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருப்பதாகவும், 16ம், 17ம், 18ம் திகதிகளில் உதைபந்தாட்டப்போட்டி இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாகவும் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் கிருபாகரன் இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார்.

இறுதியாக நடைபெறும் மெய்வல்லுநர் போட்டி மார்ச் மாதம் 25-ம் திகதி நடைபெறவிருப்பதாகவும் இப்போட்டி நடைபெறும் இடம் பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் திரு. கிருபாகரன் மேலும் தெரிவித்தார். (12)

## நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண அரசால் அமுல் நடத்தப்படவுள்ள பட்டதாரி பயிற்சித் திட்டத்தில் திரு. வி, ஏ. சிவராசா வடக்குகிழக்கு மாகாண அமைச்சின் தகவல் தொடர்பு திணைக்களத்தில் நியமனம் பெற்றுள்ளார்.

## ஆசியவங்கி பாடசாலைகளுக்கு நிதிஉதவி

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டப் பாடசாலைகளை புனருத்தாரணம் செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி கல்விப் புனருத்தாரணத் திட்டத்தின் கீழ் 9 கோடி 70 லட்ச ரூபா நிதி வழங்கியுள்ளது. [ம]

## அடையாளம் காணாது சடலம் அடக்கம்

(கிளிநொச்சி)

பரந்தனில் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் மரணமான நபரின் மரணத்தில் பகிரங்க தீர்ப்பு வழங்கப்பட்டதுடன் அரச செலவில் சடலம் அடக்கம் செய்யப்பட்டது,

மரணம் தொடர்பான விசாரணையை கிளிநொச்சி பிரிவு திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர் கே. வி கே. திருலோகமூர்த்தி கிளிநொச்சி அரசினர் வைத்திய சாலையில் வைத்துமேற்கொண்டார். சடலம் பரிசோதனையை மாவட்ட பதில் வைத்திய அதிகாரி டாக்டர் அருள் லிங்கம் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்தார்.

உருக்குலைந்த நிலையில் சுாணப்பட்ட சடலம் அடையாளம் காணப்படவில்லை. கிளிநொச்சி நகர் கிராம சேவையாளர் எஸ். ஜீவரெத்தினமும சாட்சியளித்தார். (83)

## பிரின்ஸ் செற் கல்வி நிலையம்

(மட்டக்களப்பு)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் முதலாவது ''பிரின்ஸ் செற்'' கல்வி நிலையம் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்புபிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. கே. சோமசுந்தரம் வைபவரீதியாக இதனை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

ஆசிரிய பயிற்சி கலாசாலை அனுமதி பெருத ஆங்கில உதவி ஆசிரியர்களுக்கு சனி, ஞாயிறு நாட்களில் பயிற்சி அளிப்பதற்காகவே இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வருட பயிற்சியின் போது பேராதனை ஆங்கில ஆசிரிய பயிற்சிக்கலாசாலை மூலம் இறுதிப் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவர். பரீட்சையில் சித்திபெற்றால் இவர்களுக்கு பயிற்றப்பட்ட ஆசிரிய நியமனம் வழங்கப்படும். (ம)

## மீண்டும் நெற்செய்கை

1983ம் ஆண்டு முதல் தண்ணீர் முறிப்பு பகுதி இலங்கை இராணுவத்தால் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டிருந்ததால் நெற்செய்கை கைவிடப்பட்டிருந்தது தற்போது ஏற்பட்டு வரும் சூழலையடுத்து தண்ணீர் முறிப்பு திட்டத்தில் நெற்காணிகள் மீண்டும் விவசாயம் செய்றப்படவிருக்கிறது.

800 ஏக்கர் நெற்காணியில் சிறுபோகம் செய்யவும் அதற்கான நடவடிக்கைகளை முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் துரிதமாக எடுத்து வருகிறார்.

## அம்புலன்ஸ் மண்டபம்

(அச்சுவேலி)

அச்சுவேலி அரசினர் ஆஸ்பத்திரியில் 80 ஆயிரம் ரூபா செலவில் அம்புலன்ஸ் நிறுத்தி வைப்பதற்கு மண்டபம் அமைக்கப்பட்டு வருகின்றது. இம்மண்டப வேலைகளை அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மேற்கொண்டுள்ளது

## இடமாற்றம்

(மாங்குளம்)

யாழ்ப்பாணம் புகையிரத நிலைய அதிபர் திரு. தியாகராசா இம்மாதம் 21ம் திகதி முதல் மாங்குளம் புகையிரத நிலைய அதிபராக இடமாற்றம் பெற்றுள்ளனர். மாங்குளம் புகையிரதநிலைய அதிபர் திருகோணமலை'கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## பொலிஸார் அதிகாரிகள் பதவி உயர்வு

[யாழ்ப்பாணம]

யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் தமிழ் பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் அடுத்தமாதம் முதல் சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

மார்ச் மாதம் பதவி பெறுவோர் விபரம் வருமாறு: கதிர்காமநாதன் கிளிநொச்சி (ஓ. எஸ். பி], ஜெயக்குமார் கிளிநொச்சி (தலைமைப் பொலிஸ் அதிகாரி], சிறீதரன் காங்கேசன்துறை (எச். கியூ ஐ] சுதேசநாதன் முல்லைத்தீவு [ஓ. ஐ. சி] கோபாலகிருஷ்ணன், யாழ்ப்பாணம் (எச். கியூ. ஐ.) சந்திரமோகன் மாங்குளம், [ஓ. ஐ. சி) அரசரட்ணம் மன்னார் சச்சிதானந்தம், மட்டக்களப்பு (ஓ. ஐ. சி) [ஓ. ஐ. சி) கொழும்பு பகுதியில் சுந்தரலிங்கம், மிரிகானை [எச். கியூ. ஐ) சிறிகோணேஸ்வரன், பொறளை. (ஓ. ஐ.சி] (56]

## இலட்சார்ச்சனை

[மட்டுவில்)

சாவகச்சேரி அருள் மிகு ஸ்ரீ தாளையம்பதி துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த மாசி மக இலட்சார்ச்சனை விழா மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகிறது. பத்தாம் திகதி சனிக்கிழமை சங்காபிஷேகத்துடன் விழா பூாத்தியாகும். (82)

## முல்லை மாவட்டம்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

இது இவ்வாறு இருக்க முல்லை தனியார் போக்குவரத்துச் சங்கமும் முல்லை பேருந்து சாலையும் இரவு 8 மணி வரை உள்ளூர் சேவைகளை நடாத்தவும் இணங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (144)

## உயரஉயரப்பறக்கும் புலிக் கொடி

(ஒட்டிசுட்டான்)

கிளிநொச்சிக்கும் முறிகண்டிக்குமிடையில் உள்ள தொலைத்தொடர்பு கம்பத்தில் தமிழீழ வடுதலைப் புலிகளின் கொடி மிகவும் உயரத்தில் பறந்துகொண்டிருக்கிறது.

புலிக்கொடி கட்டப்பட்டுள்ள தொலைத் தொடர்புக் கம்பம் சுமார் 250 அடி உயரமுள்ளது.

வடமாகாணத்தில் கட்டப்பட்டுள்ள புலிக்கொடிகளில் இதுவே அதி உயர்ந்த கம்பத்தில் கட்டப்பட்டு பறக்கின்றது. [144]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அமைதிப்படை யாழ். பல்கலைக்கழகத்தில் செய்த அட்டூழியங்கள் குறித்து வேதனையடைகிறேன் - நெடுமாறன்

(யாழ்ப்பாணம்)

இந்திய அமைதிப்படை யாழ். பல்கலைக்கழகத்தில் செய்த அட்டூழியங்களைப்பற்றி நேரடியாகக் கேள்விப்பட்டு மிகவும் மனவேதனையடைகிறேன்.

இவ்வாறு தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. பா. நெடுமாறன், யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் மறுமலர்ச்சி கழகத்தின் ஆதரவில் நேற்று ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

இலங்கை இந்திய அரசியல் தலைவர்கள் 1987ல் திடீர் என உடன்பாடு செய்து கொண்டு அதை தமிழர்கள் மீது திணித்தார்கள். இந்த முயற்சிக்கு இயற்கையாகவே எதிர்ப்பு எழுந்தது. விடுதலைப் புலிகள் இவ் ஒப்பந்தத்தை எதிர்த்தனர். ஆனால் அம்மறுப்பு இங்கு அலட்சியம் செய்யப்பட்டது. எனினும் இந்நிகழ்வை இந்தியத் தலைவர் ராஜீகாந்தி ''இது வரலாறு காணாத உடன்பாடு'' என வர்ணித்தார்.

ஈழமண்ணில் முப்பது ஆண்டுகாலமாக நிகழ்ந்து கொண்டிருக்கும் உரிமைப் போராட்டத்தால் பெறாத ஒன்றை இவ் உடன்பாடு பெற்றுக் கொடுத்தது என்றும் மேலும் ஈழத்தமிழருக்கு என ஒரு மாநிலம் அமைத்துக் கொடுக்கப்பட்டது என்றும்கூறி அதற்கு விழா எடுத்தனர். ஆனால் இது எவ்வளவு தூரம் உண்மை என்பதை பின் நிகழ்ந்த விளைவுகள் எடுத்துக் காட்டியிருக்கும்.

இந்தியா, திலீபனின் உண்ணாவிரதத்தை அலட்சியம் செய்தது. அதைவிட குமரப்பா, புலேந்திரன் கொலைகள் என்பனவும் தமிழ் போராட்டத்திற்கு எதிரான திட்டமிடப்பட்ட சதிகளாகும்.

அமைதிப்படை வடக்குக் கிழக்குப் பகுதிகளின் எல்லைப் புறங்களில் இருந்து தமிழருக்குப் பாதுகாப்பு வழங்குவதற்குப் பதிலாகத் தமிழரையே அது கொன்றது.

இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான மக்கள் புரட்சி இந்திய மண்ணிலே இந்திய மக்கள் நிகழ்த்தினர் என்றும், இதை முழுவதும் ராஜீவ் அரசு தனது பிரசார சாதனங்கள் மூலம் 'இருட்டடிப்புச் செய்தது.

ஈழத் தமிழர் பிரச்சனையில் ராஜீவ் அரசால் மழுங்கடிக்கப்பட்ட உண்மைகள் அனைத்தையும் வெளிக் கொணரும் வரை உழைப்போம். ஈழத் தமிழ் மக்கள் போராட்டத்திற்கு நாம் தொடர்ந்தும் ஆதரவு அளிப்போம் என்றும் கூறினார்.

## மரண அறிவித்தல்



கந்தசாமி ஜெகநாதன் [ஜெகன்]

(உரிமையாளர்:- ராணி மில் - நெல்லியடி,
அர்ச்சுனா மில் - கரவெட்டி,
செல்லம் மில் - முள்ளியவளை)

நெல்லியடியைச் சேர்ந்த திரு. கந்தசாமி ஜெகநாதன் (ஜெகன்) நேற்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (1990-02-27) செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெறும்.

தயவுசெய்து இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

நெல்லியடி,
கரவெட்டி.

தகவல்:-
குடும்பத்தினர்.
[சி-3537]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு மாசி மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/80. Eelanadu P O. Box No. 49. Telegram; Eelanadu; Telephone: 2291,

## இலங்கையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இரு பிரதிநிதிகளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அனுப்பியுள்ளதுடன், இது தொடர்பாக அறிக்கை ஒன்றினையும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா வெளியிட்டுள்ளார்.

''அண்மைக் காலங்களில் இலங்கையில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களின் கொலைக்கு அரசு ஆதரவுக் கொலைப் பிரிவே காரணம். இதற்கான பல சான்றுகள் எம்மிடம் உள்ளன. மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி ஆராய எதிர்க் கட்சிகள் அடுத்த வாரம் கூடும்.

''கடந்த வாரம் கொலைசெய்யப்பட்ட பத்திரிகையாளர் திரு. றிச்சர்ட் டீ சொய்சாவின் கொலைக்கும் இந்த அரசு ஆதரவுப் படைகளே காரணம். அரசின் மனித உரிமை மீறல்களை இந்தப் பத்திரிகையாளர் கண்டித்து வந்ததே காரணம்'' என்று திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## அமைதிப்படையினரின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பான அமைதிப்படை அதிகாரி ஜெனரல் ஆர். என். பல்லாவிடம் வினவியபோதும் இதுவரை எந்தவித தகவல்களும் இவர்களபற்றி கிடைக்கவில்லை.

''மேற்படி காணாமல்போன நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்களும் கடந்த 17 மாதங்களுக்கு மேலாக அமைதிப்படையினரின் தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டவராவார்கள் இவர்களைத்தேடும பணியில் பெற்றோரும் ஈடுபட்டுள்ளனர். பல பெற்றோர் தமது பிள்ளைகள் தடுப்பு முகாமிலிருந்து காணாமல் போனதாக சத்தியக் கடதாசியும் கொடுத்துள்ளனர்.

''ஒரு வீட்டிலிருந்து மகன் ஒருவரும் மூன்று மகள்மாரும் அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்டு தடுப்பு முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் எனினும் இதுவரை அவர்கள் பற்றி தகவல் ஏதுவும் தெரியவில்லை என்றும அந்தப் பெற்றோர் கூறினர் மேலும் அவர்களை தேடும் முயற்சியில் ஈடுபட்டும் அது பலனளிக்கவில்லை

''எமது பிரஜைகள் குழுவைச் சேர்ந்த இரு உறுப்பினர்களும் அமைதிப்படையினரால் கொல்லப்பட்டுள்ளனர். அனைத்து தடுப்புக்காவல் இளைஞர்களுக்கும் நாம் பெற்றோர்களிடம் பொறுப்பு சொல்லவேண்டும்.

''அமைதிப்படையினர் இங்கிருந்து வெளியேறு முன்னர் காணாமல் போன நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்களின் நிலைபற்றியும் அவர்கள் தெரிவிக்க வேண்டும். இதற்கு அவர்கள் பொறுப்பு பற்று, விசாரணை நடாத்துவது அவர்கள் கடமையாகும் எனினும் இது தொடர்பாக நாம் மீண்டும் அமைதிப் படையினருடன் தொடர்பு கொண்டு இவர்கள் நிலைபற்றி கேட்கவுள்ளோம்.

''[illegible] தடுப்பு முகாமென கூறப்பட்ட போதும், அங்கு தடுத்து வைக்கப்பட்ட இளைஞர்களின் எதிர்காலத்திற்கு எந்தவிதமான புனர்வாழ்வு நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சைக்கிளில் சென்ற வயோதிபர் கீழே விழுந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

சைக்கிளில் சென்ற வயோதிபர் ஒருவர் கீழே விழுந்ததால் தலையில் அடிபட்டு ஸ்தலத்திலேயே பலியானார்,

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. தெல்லிப்பளையைச் சேர்ந்த அம்பலவாணர் வல்லிபுரம் [வயது 63] என்பவரே பலியானவராவர்.

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சமயம் எதிரே மினி பஸ் வருவதைப் பார்த்த வயோதிபர் திடுக்குற்று தடுமாறி கீழே விழுந்ததாக வயோதிபரின் மகன விசாரணையின் போது தெரிவித்தார்.

யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட சடலம் விசாரணை முடிவில் மகனிடம் ஒப்படைக்கப்பட்டது,

விழுந்து அடியுண்டு மூளையில் ஏற்பட்ட தாக்கத்தால் ஏற்பட்ட மரணம் எனத்தீர்ப்பளிக்கப்பட்டது. [56]

## நகைக்கடை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாகலிங்கம் . தெரிவித்தார்.

இது சம்பந்தமாக அவர் மேலும் தகவல் தருகையில், ''தங்கத்தை நிறுப்பதற்குக் கிராம் முறையிலான 'எலக்ரோனிக்' தராசுகளையே பயன்படுத்தவேண்டும் எனப் பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம் தெரிவிக்கிறது. இத்தராசுகள் தற்போது நாட்டில் விற்பனைக்கு வந்துள்ளன.

ஒரு பவுண் 80 மில்லிகிராமாக இருக்கும். அதனை அடிப்படையாகக் கொண்டு விற்பனை நடைபெறவேண்டும். தற்போது பாவனையில் உள்ள பஞ்சாடி, குண்டுமணி அனைத்தும குறிக்கப்பட்ட பவுண் எடைக்குச் சரியாக இருப்பதில்லை. இதில் மோசடிகள் நடக்கிறது. நகைக் கடை வர்த்தகர்களது தராசுகளைச் சரிபார்த்து 'சீல்' இடுவதற்கு மேற்படி திணைக்களத்திற்கு 8 லட்சம் ரூபா பெறுமதியான சாதனம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இது அடுத்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்படும் புதிய நடவடிக்கை பற்றித் திணைக்களம் நகை வியாபாரிகள் சங்கத்தை அழைதது விளக்கம் அளிக்க உள்ளது'' என்றும் அவர் கூறினார். (12)

## எமது கட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டத்தை நாம் முன்னெத்து வந்தபோது எமது அரசியல் பிரிவு ஒருதலைமறைவு அமைப்பாகவே செயற்பட்டுவந்தது

யதார்த்த புறநிலைகள், போர்ச்சூழ்நிலைக்கு ஏற்ப நாம் எமது அரசியல் பாதையை நெறிப்படுத்தி வந்தோம். இன்றைய புதிய வரலாற்றுச் சூழ்நிலையில் நாம் ஜனநாயக வடிவத்தில் எமது போராட்டத்தை முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது என்றார்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பொதுச்சபை மகாநாட்டின்போது கட்சியின் அமைப்பு விதிகளைக் கொண்ட யாப்பு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு திருத்தங்கள் செய்யப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## சீதனப் பிரச்னை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வருவதாவது:-

சுமார் பத்து வருடங்களாக இவருக்கும் மாமனுருக்கும் சீதனப் பிரச்னை தொடர்பாகத் தகராறு இருந்து வந்தது எனவும், சம்பவதினம் வாய்ச்சண்டையின் முடிவில் மருமகன் மாமனுருக்கு கம்பியால் தலையில் அடித்ததாகவும், அதனுல் ஆத்திரமடைந்த மாமன் பொல்லொன்றை எடுத்துக் கொண்டுவர அதைப்பார்த்து ஓடிய மருமகன் தடக்கிவிழுந்த போது மாமன் தலையில் ஓங்கி அடித்தாரெனவும் மரண விசாரணையில்சாட்சியமளித்த இறந்தவரின் மனைவியும் தாக்கியவரின் மகளுமான டெய்ஸி ஜெயராணி ஜோசப்ராசா என்பவர் தெரிவித்தார்.

சடலம் பிரேதபரிசோதனைக்காக ஆஸ்பத்திரி பிரேதச்சாலையில் வைக்கப்பட்டது.

தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது. [56]

## கலைஞர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களில் சுயேச்சையான தேர்தல்கள் நடைபெறவேண்டுமென்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தெரிவித்ததாகக் குறிப்பிட்ட தமிழக முதல்வர், இதற்குப் பதிலாக ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கமோ இப்போதைய மாகாண சபையின் பல உறுப்பினர்களை ராஜினுமாச் செய்யவைத்து விட்டு, அந்த இடங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை நியமிக்கத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டது என்றார்.

இந்த யோசனையை விடுதலைப்புலிகள் இயக்கத்திடம் தெரிவித்த போது அந்த இயக்கத் தலைவர்களோ மக்கள் ஆதரவு தங்கள் இயக்கத்துக்கு இருப்பதாகவும் அதை நிரூபித்துக் காட்டும் வகையில தேர்தல்கள் நடப்பதே முறையானது என்றும் பதிலளித்தனர் என்றார்.

இந்தப் பின்னணியில் இன்று சந்தித்த பிரதிநிதிகள் குழு முதல் தடவையாக இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு பத்தொன்பது நிபந்தனைகளை விதித்துள்ளது என்றார்.

மாகாண அரசு வெளிநாட்டுத் தொடர்புகளை வைத்துக் கொள்வது போன்ற யோசனைகளை இந்தியாவும் இலங்கையும் ஏற்று இடைக்கால அரசு ஏற்பட்டு அதற்குப் பிறகு தேர்தலை நடத்த வேண்டும் என்று கூறியிருக்கிறது என்றார்.

ஆனுல் இந்த பத்தொன்பது நிபந்தனைகள் பற்றி திரு. கருணாநிதி கருத்து எதுவும வெளியிட மறுத்தார்.

இந்திய அமைதிப்படை திரும்புவதைத் தவிர வேறு வழியில்லை, முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி சென்ற டிசம்பர் மாதம அமைதிப்படை வாபஸ்ஆகும் என்று கூறி இருந்ததை சுட்டிக் காட்டிய மத்திய அரசு வரும் மார்ச் 31-ம் திகதி அமைதிப்படையை விலக்கிக் கொள்கிறது.

இந்தப் பேச்சுவார்த்தையில் மத்திய அமைச்சர் திரு. முரசொலிமாறனும் கலந்து கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் முதலமைச்சர் திரு. வரதராஜப் பெருமாளும், ஈ. பி. ஆர். எல். எப். செயலாளர் திரு. க. பத்மநாபாவும் கூட்டாக எழுதிய கடிதம் ஒன்றும் முதல்வரிடம் கொடுக்கப்பட்டது.

ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் தெரிவித்திருக்கும் பத்தொன்பது யோசனைகள் குறித்து அரசியல் பார்வையாளர்கள் வியப்புத் தெரிவித்துள்ளனர்.

1954ம் ஆண்டு தொடக்கம் ஏற்பட்ட பல்வேறு பிரச்சனைகளை உள்ளடக்கிய இந்தப் பிரேரணைகள் கடைசி நேரத்தில் கொடுக்கப்பட்டிருப்பது இன்னும் ஒரு மாதத்திற்குள்ளாவது தமிழ் அமைப்புக்களிடையே ஒற்றுமை நிலவவேண்டும் என்ற நல்லெண்ணத்துக்கு ஊறு விளைவிப்பதாக இருக்குமென்றும் அரசியல் பார்வையாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org